1222

Registered No. M. 2095.

ஓம்

15 JU

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 16 } 1926-ஸ் மே-மீ 11உ { பகுதி 11.

பொருளடக்கம்.

1. ஸ்ரீ பிளாவட்ஸ்கி அம்மையார்மீது பாடிய பாமாலை
—K. S. இராமஸ்வாமி அய்யர் ... 301
2. ஜகத் உத்தாரண தீர்யம்—யோகி லெட்பீடர்
அவர்களின் ஜூப்ளி உபந்யாஸ சுருக்கம்.
—(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 304
3. பிஷப் வெட்ஜ்வுட் அவர்களின் ஜூப்ளி உபந்யாஸம்
—(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 308
4. அடையார் க்ஷேத்திர மாஹிமியம்— தெலுங்கு பிரம்ம
ஞானதீபிகை —(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 316
5. குறிப்புகளும் சமாசாரங்களும் ... 323
6. நாரத பக்தி ஸூத்திரங்கள். (தொடர்ச்சி)
—P. S. ராமசுப்பையர். ... 9

சந்தா விபரம்:—
வருஷ சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0.
தனிப்பிரதி ரூ 0—2—0.

—V. இராமச்சந்திர நாயுடு, எணங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நிலை விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

| தொகுதி 16 | 1926-௵ மே-மீ 11உ | பகுதி 11. |
|---|---|---|


## ஸ்ரீ ப்ளாவட்ஸ்கி அம்மையார்மீது பாடிய பாமாலை (வெண்பா.)

1. வெண்டா மரையுலகில் வீற்றிருக்கும் ப்ளாவட்ஸ்கி
தண்டா ளிணைசென்னி தாக்கிடவே---பண்டாரும்
ஊழ்வினைகணீங்கி யுயர்கரும யோகியெனும்
தாழ்விலனு பூதிதழைக் கும்.

2. மாதரசியென்னும் மகிமையவட்கே செல்லுந்
தீதொழிக்க வேதீர மாய்வந்து—பூதலத்திற்
சிந்தை பிறந்திடத்தைச் செப்பியதன் சித்திரத்தை
விந்தை யுடன்விளக்கி னார்.

3. சத்துச்சித் தானந்த சாசுவதம் சாருவதற்
கெத்தனையோ மார்க்க மிருந்தாலுஞ்---சுத்தவெளி
யம்பலத்தி லுள்ள வருட்குருவி னாணையினால்
நம்பிரம ஞானநயந் தார்.

4. சாதிகுலம் பாராரே சாதுக்கடங்களுடன்
நீதிமுறை நேர்படவே போதிக்கத்—தீதொழிந்த

# நமது சந்தா நேயர்களுக்கு விசேஷ அறிவிப்பு.

நமது ஞானோதயம் 16 வது தொகுதி அடுத்த ஜூன் மாதத்தில் முடிவடைந்து ஜூலை மாதத்தில் 17-வது தொகுதி ஆரம்பமாகும். இவ்வருஷத்தில் முன்பணமாக சந்தாத்துகையை அனுப்பி பத்திரிகையை ஆதரித்துவந்த நமது அருமைநேயர்கள் தயவுசெய்து அடுத்த வருஷத்திய சந்தா ரூ 1ம் முன்னடியே மணியார்டர் மூலம் அனுப்பி உதவிபுரிவார்களென்று நம்புகிறோம். அவர்கள் அப்படிச்செய்வதானது, பத்திரிகை விசேஷ உற்சாகத்துடன் நடைபெறுவதற்கு எவ்வளவுதூரம் உதவியாகுமென்பது அவர்களுக்கே தெரியாத விஷயமாகுமோ?

2 நாங்கள் சந்தாத்துகையை முன்பணமாகவே பெற்றுக்கொண்டு பத்திரிகையை அனுப்பி வருகிறோமாயினும், பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளத் தக்கவர்களென்று நம்பி சில கனவான்களுக்குப் பத்திரிகை அனுப்பியிருக்கிறோம். பிறகு அனுப்புவதாய் ஒப்புக்கொண்டு சில நண்பர் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் இவ்விருவகை அபிமானிகளான நண்பர்களும் தயவு செய்து சந்தாத் துகையை கால தாமதம் செய்யாமல் உடனே அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்

3. பிரம்மஞான ஸபை மெம்பர்களாயுள்ளவர்கள் நாளது வருஷத்திய சந்தா ரூ 4ம் செலுத்தாமலிருந்தவர்களுக்கு சென்ற மாதமுதல் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்பட்டது. அவர்கள் சந்தாத்துகையை அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

4 நமது பத்திரிகை அதிகமாய்ப் பரவவேண்டுமென்ற உத்தேசத்துடன் சில நண்பர்கள் சிரத்தையெடுத்துக்கொண்டு உழைத்து வருகிறார்கள் அவர்கள் தயவுசெய்து இதுவரையில் சேர்ந்திருக்கிற சந்தாதாரர்களின் ஜாப்தாவும் சந்தா துகையும் அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

**பத்திராதிபர்.**

210893

சுத்தமன மேசாந்த சூரர்களைத் தான்தேர்வர்
அத்தகைய [illegible]ம்மம்மை யார்.

5. எம்மும்மை யுள்ளிருந்தவி சனுரு வாஞ்சிவன்
தேம்முண்மை தானறியப் பெற்றிடவே—செம்மையுள
சாதி குலம் பெருமைதள்ளிச் சிறுவயதில்
நாத னடிநண்ணி னார்.

6. வேதம் விளங்க விமலனடிக் கீழிருந்து
சீதம் பொழியிமயச் சாரலிலே—ஓதினளே
சீர்பிரம ஞானம் சிறந்திடவே மூவுலகும்
யாரிவரை யேற்றத் தகும்.

7. உலகுப்பயவேயுழைத்தல் உத்தமரின் கொள்கை
நிலனுற்ற நீதிமுறை யாதற்—பலவிதமாந்
தீங்ககல வேயுழைத்துச் செப்பரிய வின்னல்பொறுத்
தோங்க வுலகைவைத்த னர்.

8. பாதை புகுந்திடவே பக்தர்களெங் குற்றாலும்
சீதக் கருணையுடன் தேர்ந்தவரை—வேதை
யனுபோகத் தாலவரின் அல்லலகற் றிப்புன்
வினையில் விதிவிளக்கி னார்.

9. வேதம் விளக்கல் வினைத்திரய மேயென்னப்
பூதலத்தி லுள்ளபுத்தி மாறிய—வோதியபின்
வேதாந்த உண்மைவிரியும் விசித்திரத்தைப்
போத முறப்புகட்டி னார்.

10. உபநிஷத அர்த்தம் உலகிலெவ ராயினுந்
தபசுஞற்றத் தக்கமனஞ்சாரி—னுபநியசித்
தோங்க வுபகரித்த உத்தமியிவ் வம்மைபதந்
தாங்கத் தவம்செய்வமே.

11. மனித ரெனவாகும் மாண்பென்றால் என்னுந்
தனிவிகச ஜீவனெனத் தேறல்—எனவிளக்கும்



தத்துவத்தைத் தாரணியில் தாபிக்கத்தானிந்த
சுத்தசபை யைநாட்டி னார்.

12. நாட்டப் படுபிரம ஞானசபை ஞானிகளின்
கூட்டத்தி னிற்குலவு பாக்கியத்தை—எட்டினிலே
என்றுலெழுதப்படுமோ யிவர்மகிமை
சொன்னா ரடைவர் சுகம்.

13. உண்மை யுரைத்தல் உலக விரோதமெனும்
திண்மைப் பழமொழியைத்தேர்ந்தவர்கள்—தண்மையுள
சத்தியவா னந்தறிவு தாந்தழைத்திட் டோங்கிடவே
நித்த முறுவா ரிடர்.

20893.

14. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுமே துன்பம்
சுடச்சுடநோற் கிற்பவர்கட் கென்று—எடுத்துரைத்த
நாயனார் சொல்லுண்மை நாட்டி யுலகிலருள்
பாயஉழைத்தோங்கி னார்.

15. ஈசன்யார் யான்யாரென் றெண்ணப் புகட்டுவதே
பாசமற்ற பாதையுற்றோர் பண்பென்று—நேசமுடன்
தெள்ளிய உண்மைத் திரவியத்தைத் தேசமொங்கும்
கொள்ளக் கொடுத்துதவி னார்.

16. காலம் கவினுவதைக் கண்டறியக் கண்கொடுத்து
ஞாலத் தவரறிய நாட்டியே—கோலமுடன்
அஞ்ஞான நாஸ்திகத்தை யகலவழித் தேயுலகில்
மெய்ஞான ஆஸ்திகொடுத் தார்.

17. தேசமவன் மேனியெனத் தேற்றியனைத் துலகும்
பாசமுடன் ஒப்புரவாய்ப் பாங்குடனே—நேசமுடன்
கூடிக்குலவக் கொடுத்தனரே தற்போதம்
நாடிநாமீ டேறத் தான்.

18. அயனச் சுழலிலெல்லாம் ஆக்கியழித் தேமூன்று
நயனத் தூடனவி லுநாதன்—நயமுடனே

ஆனந்தமாயகில ஆருயிரி லேயிருந்து
ஞான வரம்பை நவிலுவான்.

19. இவ்வுண்மை யேத்துலக மீடேற இத்தருணம்
செவ்விதெனத் தேர்ந்தவரும் சித்தர்கள்—இவ்வுலகில்
எங்குமுள பக்குவியுள் ஏற்றவரிவ் வம்மையெனத்
தங்களுட ஆளாக்கி னர்.

20. அம்மை யனுபவித்த அல்லைகற் றல்அவர்கள்
செம்மைத் திறமிலையோ செப்பென்பர்—நம்மவர்கள்
ஆனலது வெள்ளி யம்பலத்தை யண்டிடவே
போனர்க்குத் தான்புலமா கும்.

K. S. இராமஸ்வாமி அய்யர்,
பொன்மலை.

---

# * ஜகத் உத்தாரணத்திரயம்.

## III

## குப்த வித்யா புனர் உத்தாரணம்.

### I

### யோகி லெட்பீட்டரவர்களின் உபன்னியாஸம்.

முதன்முதல் புனர் உத்தாரணம் செய்யவேண்டியது எதுவோ அதைத் தெரிந்துகொள்வதற்கு நாம் பிரயத்தனிக்கவேண்டும். குப்த வித்தை வேண்டிய அளவு துர் அபிப்பிராயங்களின் வசமாகியிருக்கின்றது. அதைக்குறித்து விசேஷகிரந்தங்களில்லை. இருக்கிறவரைக்கும், அதனிடம் விரோத அபிப்பிராயங்களை உடையவர்கள் எழுதியவைகளிருக்கின்றன. ஒவ்வொரு பெரிய மதத்திலும், பஹிரங்கப்படுத்துதல் நல்லதன்றென எண்ணப்பட்ட விஷயங்கள் சில இருக்கின்றன. அவைகளைத் தெரிந்துகொள்வதற்கு யோக்கியதையைச் சம்பாதித்துக்கொண்டவர்களுக்கு மாத்திரமே சொல்லப்பட்டுவந்தன. எந்த விஷயமானாலும், ரஹஸ்யமாய் வைத்தல் தற்கால யுகதர்மத்திற்கு விரோதம். இப்பொழுது பௌதிக சாஸ்திரி தன் பரிசோதனைகளின் பலன்களை வெளிப்படுத்துவதற்குப் பாத்தியஸ்தன் என்பதாக எண்ணப்படுகின்றான். ஒருவிதத்தில் அது யுக்தமே. ஆனாலும், இவ்விஷயத்தில் விசாரிக்கக்கூடிய இன்னொரு பக்ஷமிருக்கின்றது. அது ஸாமான்ய ஜனங்களிடத்து ஸ்வலாப புத்தியால் உண்டாகின்றது. கடந்த மஹாயுத்தத்தில் பெரிய ரஸாயன பரிசோதனையால் கிடைத்த மர்மங்கள் மானிட அபிவிருத்திக்கில்லாமல், மானிட நாசத்திற்கே உபயோகப்படுத்தப்பட்ட விஷயம் நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயமே. பரிசோதகர்கள் கண்டுபிடித்த சில மஹத்தான விஷயங்களை ஒவ்வொருவருக்கும் தெரியச்செய்வதால், மொத்தமாய் மானிடகோடிக்கெல்லாம் விபரீதம் உண்டாகும்.

இந்த ரஹஸ்ய தத்துவங்கள் எல்லாப் பெரிய மதங்களுக்கும் தெளிவாய்த் தெரிந்தவைகளாயினும், கேவலம் மதத்தோடு சம்பந்தப்பட்டவை மாத்திரமன்று. அவைகளால் முன்னேற்றத்தை யடைபவர்களுக்கு அவைகள் ஒரு நன்கமைந்த விக்ஞான முறையென எண்ணின் அவைகளின் விஷயம் நன்றாய்த்தெரியும். நம்மவர்களில் அனேகர் தமது கலாசாலைகளை விட்டவுடன் வித்யாபிவிருத்திசெய்யக் கிரமமான பிரயத்தனங்கள் செய்யார்கள். பூர்வம் அவ்விதமன்று. குப்த வித்யா ரஹஸ்ய தத்துவங்களெனச் சொல்லப்பட்ட இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ள மேற்கொள்பவர்களின் உத்தேசம், தமது வித்யாபிவிருத்தியைச் செய்துகொள்வதற்கேயாம். அவர்களுக்கு கேவல மததர்மங்களைக்குறித்தேயல்லாமல், வெகு சாஸ்திரங்களைக்கூட போதித்துக்கொண்டிருந்தார்கள். பிராசீனகாலத்தில் எகிப்து தேசத்தில் ரஸாயன சாஸ்திரத்திற்கு மிகுந்த கௌரவம் அளிக்கப்பட்டுவந்தது.

* 1925௵ டிஸம்பர்மீ 26உ பிர்ம்மஞான ஸபையின் ஐம்பதாம் வருஷோத்ஸவத்தில் அளிக்கப்பட்ட உபன்னியாசங்களின் சுருக்கம். பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.

நவீன ரஸாயன சாஸ்திரிகள் கண்டுபிடித்து வரும் விஷயங்களில் அனேகம் அக்காலத்திய எகிப்து தேசத்திய பண்டிதர்களுக்குத் தெரிந்தவைகள் என்பதாகச்சொல்லின் உங்களுக்கு ஆச்சரியமாக விருக்கும். ஐரோப்பாகண்டத்தில் இதன் மத்தியில் சில வருஷங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டு வரும் ககோள சாஸ்திர விஷயங்கள் எவ்வளவோ அவர்கள் அறிந்திருந்தார்கள். பிரகிருதி ரஹஸியங்களைக் குறித்த பெரிய விஷயங்கள் சிலவற்றைக்குறித்து, 16,17 வருடங்களுக்கு முன்னர் நமக்குத் தெரிந்ததைவிட விசேஷ உண்மையாய் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அந்நாள் குருமார்கள் தங்கள் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கவேண்டிய விஷயங்கள் விசேஷமாக இருந்தன. அவர்களது வித்தை வெகு சாஸ்திரயுக்தமாயும், அனுபவஞான யுக்தமாயும் கூட இருந்தது. சிஷ்யர்களுக்கு மிகுந்த பிரயோஜனகரமாயுள்ள விஷயங்களை அவர்களுக்கு போதித்துக்கொண்டிருந்தார்கள். இன்று நமது வித்யா முறையில் குழந்தைகளுக்கு வியாவஹாரிகமாய் பிரயோஜனமற்ற விஷயங்கள் அனேகம் சொல்லிவருகிறார்கள். அவர்களை மரியாதையுள்ளவர்களாயும், பக்தியோடு கூடினவர்களாயும், சத்தியப்பிரவர்த்தகர்களாயும், ஸ்வலாபபுத்தியை விட்டொழித்தவர்களாயும் செய்யக்கூடிய போதனைகளுக்கு எவ்வளவு சுவல்பகாலமானாலும் வினியோகிக்கமாட்டார்கள். ஆனால் பூர்வ அத்யாத்ம ரகசியதத்துவ போதனாமுறையில், முதன்முதல் போதிக்கப்பட்ட விஷயம் யாதெனில், ஒருவன் எவ்விதம் தனது ஜீவியத்தைச் செலுத்தவேண்டுமென்பதும், அவன் ஏன் ஒரு விதத்திலேயே பிரவர்த்திக்கத்தக்குமேயொழிய, வேறொரு விதத்தில் பிரவர்த்திக்கக்கூடாதென்பதுமாம். ஆகையால் முதன்முதலாக உயர்ந்த ஸன்மார்க்க விதிகளைப்பற்றி போதித்து வந்தார்கள். இப்பொழுது பிர்ம ஞான ஸபையாரைப்போலவே, அப்பொழுதும் எவ்விதமாய் எதற்கும் பிரவர்த்திக்கவேண்டுமோ அதை ஸ்பஷ்டமாய் போதித்துக்கொண்டிருந்தார்கள். பின்னர், மனிதனின் மரணாந்தர ஜீவித ஸ்திதியைக்குறித்துச் சொல்லிவந்தார்கள். இப்-



போதைய ஐரோப்பாவைப்போலல்லாமல், அவர்கள் அக்காலத்தில் பிரகிருதியின் சன்னிதானத்திலேயே, விசேஷகாலத்தைக் கழித்துவந்தார்கள். அதனால் அவர்களிடத்தில் லோகாயதமதம் (Materialism) இருந்தாலும் மிகவும் குறைவாகவேயிருந்தது. உபதேஷ்டாக்கள்—அதாவது அத்யாத்மிக ரஹஸியதத்துவ ஞானத்தில் உத்தமதரகதிகளில் உள்ளவர்கள்—தாங்களுபதேசிக்கும் விஷயங்களைக் குறித்து பிரத்யக்ஷானுபவம் உடையவர்களாய் இருந்தார்கள். மரணம் ஸம்பவித்தவுடன் எது செய்யவேண்டுமோ அதைத்தமது சீடர்களுக்கு அவர்கள் தெளிவாய் எடுத்துரைத்து வந்தார்கள். அதை உரைத்தல் அத்யாவசியமென அவர்களது அபிப்பிராயம். ஆனதுபற்றி, அவ்விஷயத்தில் விசேஷ முக்கியத்தை யளித்துவந்தார்கள்.

இந்த ரஹஸிய தத்வோபதேசங்களில் ஒருவன் ஒரு தரகதியில் எவ்வளவு காலமிருக்கவேண்டுமென்பது அவனது முயற்சியை ஒட்டியே நிர்ணயிக்கப்பட்டு வந்தது. ஒருதரகதியில் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் எல்லாவற்றிலும் பரிபூரண பிரக்ஞையுண்டானதாக நிதர்சனமாய்ப் பட்டாலொழிய எவனும் மேல்படிக்குச் செல்லயோக்கியதை பெறான். வெடிகுண்டு ஒன்றைக் கொண்டுவந்து ஒரு சிறுகுழந்தையின் கையில் வைத்தல் விவேகமன்றென அக் குருமார்களின் அபிப்பிராயம். ஸ்வாத்யாயத்தாலும் ஞானத்தாலும் ஸம்பாதிக்க வேண்டிய பிரகிருதி சக்திகள் அக்ஞானிகளுக்கும் ஸ்வலாப புத்தி யுள்ளவர்களுக்கும் ஸ்வாதீனமாகின், அவைகளால் உலகத்திற்கு நாசமே ஒழிய நன்மையுண்டாகமாட்டாது.

மேலும் அந்தரங்கசாகை ஒன்று இருந்தது. அதில் பிரவேசிப்பதற்கு, எஜமானர்களான ஆசாரியர்களின் அங்கீகாரம் அடைந்தவர்களுக்கேயொழிய, கோருபவர்களெல்லோருக்கும் அருகமில்லை. அந்த அந்தரங்க சாகையில் பிரவேசிப்பதற்கு அருகதை இருக்கிறதென்பதாக ஆசாரியர் சொல்லும் வரையில் வித்தியார்த்திகளில் எவருக்கேனும்

அந்த சாகை இருக்கிறதென்பதாகத் தெரியவராது. அது அவ்வளவு இரகசியமாக வைக்கப்பட்டது. அதற்குக்காரணமுமிருந்தது. அக்காலத்தில் ரோமன் சக்கரவர்த்திகளுக்கு தங்கள் பிரஜைகளின் ஜீவித மரணங்களின் பேரில் தடையற்ற அதிகாரமிருந்தது. அந்த அதிகாரத்தை அவர்களின் இஷ்டானுசாரம் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவ்வித தடையற்ற அதிகாரமுள்ளவர்களுக்கு இந்த இரகஸ்ய தத்துவங்களை உபதேசிக்க அருகதையில்லை.

அந்த இரகஸ்யதத்துவங்கள், கேவல மதசம்பந்தங்கள் மாத்திரமேயெனும் ஏற்பாடு இல்லையென்பதை மறவாதீர்கள். ஆனால் அந்த தத்துவங்களை உபதேசிப்பவர்கள் மததர்மபராயணர்களாக இருப்பதால், அவர்களது உபதேசங்களில் மததர்மங்களுக்கு விசேஷ முக்கியத்தை அளித்துக்கொண்டு வந்தார்கள். அந்த பிராசீனவிக்ஞான முறையை மீளவும் உத்தாரணம் செய்யின், சந்தேகமற நமக்கு நலமுண்டாகும். நமது தற்கால நாகரீகத்தோடு சம்பந்தப்பட்ட கஷ்டங்களில் பழைய முறைகளை அனுசரிப்பதற்கு முடியாதானபடியால் சில மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கின்றன. இக்காலத்திற்கு அனுகுணமாய் எவ்வித மாறுதலோடு அவைகளை புனர் உத்தாரணம் செய்ய வேண்டியிருக்கிறதோ அதைச் சொல்லும் பாரத்தை என் சகோதரர் பிஷப் வெட்ஜ்வுட் அவர்களின் பேரில் போடுகிறேன்.

---

## II

## பிஷப் வெட்ஜ்வுட் அவர்களின் உபந்யாஸம்.

குப்த வித்யா தத்துவங்களை புனர் உத்தாரணஞ் செய்ய சாத்தியமாகும்படி நாம் எவ்வித பிரயத்தனங்களைச் செய்ய வேண்டியிருக்கிறதோ, அதை எனக்குத் தெரிந்த விதம், என்னால் முடிந்த வரையில் உங்களுக்குச் சொல்லப்போகிறேன். தற்கால ஸ்திதிகதிகளில் அவைகளைப் புனருத்தாரணம் செய்தல் வெகு கஷ்டசாத்தியம் என்பதாக நீங்கள் எல்



லோரும் அறிந்திருக்கிறீர்கள். ஆனாலும், அவைகளை சாதிப்பதற்காக நாமெல்லோருங்கூட செய்யத்தகுந்தது ஏதோ ஒரு வேலை இருக்கிறதென்பது ஸ்பஷ்டமாகிறது. இவ்விஷயமாய் நாம் செய்யவேண்டிய பிரயத்தனத்தைக் குறித்து ஆராயுமுன், மதத்தின் பிரயோஜனம் எதுவோ, மானிடஸ்திதிகளில் மதத்தின் ஸ்தானம் எதுவோ, உத்தேசம் என்னமோ, கொஞ்சம் யோஜிப்போம். பிரதிமதமும், அதை அனுஷ்டிப்பவர்களுக்கு, மூன்று விதங்களாகப் பரிணமிக்கின்றது. முதலாவது, தத்துவஞானபரம்; இரண்டாவது நீதிமார்க்கம்; மூன்றாவது ஆராதனைமார்க்கம். மனிதன் இந்த லோகத்தில் இருப்பதற்கு உத்தேசம் எதுவோ, அவன் இங்கு எதைச்செய்ய வேண்டியிருக்கிறதோ, அவனுக்கும் இந்த லோகத்தைச் சுற்றிலுமுள்ள இதரலோகங்களுக்குமுள்ள சம்பந்தம் எதுவோ, அவைகளைத் தெரியும்படி செய்தல் மதத்தின் கர்த்தவ்யங்களில் ஒன்றாகும். ஆனால் சில மதங்கள், அதில் முக்கியமாக கிறிஸ்துவமதம், இவ்விஷயமாய் தனது கடமையை திருப்திகரமாய் நிறைவேற்றவில்லை. இவ்விஷயமான ஞானமெல்லாம் மதத்தின் தத்துவஞானபரமாயுள்ள பாகத்தில்சேரும். இரண்டாவது நீதிமார்க்கம். எல்லா மதங்களிலும் அந்தந்த அதிகாரிகளை உத்தேசித்துச் சில அனுஷ்டானக்கிரமங்கள் ஏற்பட்டிருக்கும். முக்திமார்க்கத்தில் நமக்குமேல் சென்றவர்கள் விவேகிகளாகையால், நமக்கு அந்தமார்க்கம் புலப்படுவதற்காக சில அடையாளங்களை வைத்திருக்கிறார்கள். நாம் புத்திமான்களாயின், அவர்களது அனுபவத்தால் லாபத்தையடைந்து, அந்த அடையாளங்களை அனுசரித்துச்செல்வோம். அவ்வித மகான்களுடைய அனுபவங்களே நமது நீதிசாஸ்திரங்களுக்கு மூலாதாரங்களாயிருக்கின்றன. மதத்தின் இந்த இரண்டுபாகங்களைக்குறித்தும் நான் இப்பொழுது விபரமாய்ச் சொல்ல எண்ணவில்லை. இனி மூன்றாவதான ஆராதனைபரமாயுள்ள பாகத்தைக்குறித்து ஆலோசிக்க விரும்புகிறேன்.

ஆங்கிலபாஷையில் Worship என்னும் சொல்லுக்கு வியத்பத்தி அர்த்தம் என்னவெனில், Worthship அதாவது

யோக்கியதை என்பதாம். ஒருவனது குணம், அருகதை, கௌரவம், ஈசுவரனுக்கு சமர்ப்பித்தல் என்பதாக கிறிஸ்தவ பிரார்த்தனைமுறையை அறிந்தவர்களுக்கு, அந்த பிரார்த்தனையின் மத்தியில், ஈசுவரனுக்கு நன்றியைத் தெரிவிக்கும் ஒரு வெகு நல்லவாக்கியம் இருக்கிறதென்பதாகத் தெரிந்திருக்கும். ஆராதனை முறையில் மிகவும் உத்கிருஷ்டமானதும் நன்றாயுள்ளதுமான பாகத்தில் அந்த சுலோகம் உதாரணமாகத் தோன்றுகின்றது. ஈசுவரனுக்கு நமது ஆராதனை அவசியமில்லை. ஆயினும் நாம் அவருக்கு நன்றியைக் காட்டி, அவரைக் கொண்டாடி பக்தி செய்தல், நமது கடமையாகயிருக்கின்றது. அவ்விதம் செய்வதால் நாம் அவருடன் சரியான சம்பந்தமுடையவர்கள் ஆவோம். ஆங்கிலத்தில் மதம் (Religion) என்னும் சொல், "பின்னுக்குக் கொண்டுபோய் சேர்த்தல்" என்பதாக அர்த்தத்தைக்கொடுக்கும் லத்தீன் பாஷையின் பதத்திலிருந்து உற்பத்தியானது. மதத்தினுடையவும் முக்கியமாய் ஆராதனை விதிகளுடையவும் முக்கியநோக்கம், மனிதனை தனது ஜன்மஸ்தானத்திற்கு மீளவும் கொண்டுபோய் சேர்த்தல்; தனது ஜன்மஸ்தானத்தை, தன்னிடம் அந்தர்யாமியாயுள்ள ஈசுவரனைக்குறித்துத் தெரிந்து கொள்ளச் செய்தல். நாம் எல்லோரும் மாயாப்பிரபஞ்சத்தில், வேற்றுமைபாவம் நிறைந்துள்ள பிரபஞ்சத்தில், இருக்கிறோமென்பதாகவும், நம்மிடமுள்ள பகவானை பூர்த்தியாகத் தெரிந்துகொள்ள மாட்டாமலிருக்கிறோமென்பதாகவும், எல்லாப் பெரிய மதங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. எம்மதத்திலானாலும் பல விதங்களான ஆராதனைக்கிரமங்கள், மனிதனுக்கு அவனது ஜன்மஸ்தானத்தைத் தெரியப்படுத்தி, கிரமமாய் அவனது ஆன்மாவாகவேயுள்ள அந்த பகவானைக் குறித்து பிரத்தியக்ஷஞானம் உண்டாகக்கூடிய நோக்கத்தோடேயே ஏற்பட்டவை. நம்மில் எல்லோரிடத்துங்கூட ஒவ்வொருசமயம், நமது பராபிரக்ஞை விகசிக்கும் சமயங்கள் சம்பவித்துக்கொண்டிருக்கும். அவ்வித சமயங்களில் சாதாரணமாய் நாம் எவரென எண்ணுகிறோமோ, அதைவிடப் பெரியவர்களென்பதாகவும், மிகவும் உத்தமர்களென்பதாகவும்



தெரியவந்திருக்கும். பக்திசிரத்தைகள் உண்டாகி, ஆராதனைபரர்களாகி இருப்பவர்களுக்கு அவ்வித சமயங்கள் அந்த ஆராதனையால் உண்டாகுமென்பதாக அனுபவத்தால் கண்டறிந்தவிஷயம். அவ்விததருணங்கள் கொஞ்சம் சம்பவித்து, கிரமமாக நாம் நித்தியமான அப்பார ஜீவிதத்திற்கு அருகமுடையவர்களாகச்செய்யவே, முடிவில் தேகாத்ம ஜீவாத்மாக்களின் ஏகத்வம் சித்திக்கும். அதற்கப்பால் நாம் சாசுவதமாக அந்த பராபிரக்ஞையின் சக்தியினிடமாக வேலை செய்துகொண்டிருப்போம். அவ்வித நிலைமைக்கு நாம் வருவதற்காக, நமது எண்ணங்களையும் இச்சைகளையும் அபிலாஷைகளையும் சரியானமார்க்கங்களுக்குத் திருப்பி, பகவானிடம் நிறைந்த பிரேமையும், நிறைந்த நன்றியறிதலுள்ள எண்ணங்களும் உண்டாகியிருக்கும் வண்ணம் நமக்கு சகாயம் அளிக்கப்படுகின்றது. மேலும் ஆராதனையால், பிரதிதினம் நமது சங்கற்பத்தாலும், ராகத்வேஷங்களாலும் துர்வினியோகம் செய்யுங்காலங்களில் கொஞ்சநேரமாவது, கொஞ்சமட்டிலாவது நாம் ஸத்வினியோகத்திற்கு உபயோகிக்க அவகாசம் உண்டாகும்.

இக்காலத்திய நாகரீகத்தை—முக்கியமாய், வர்த்தக வியாபார விவஸ்தைகளைப் பார்க்கின், அவைகளால் அந்த அத்யாத்மிகசக்திகள் எம்மாத்திரமேனும் அபிவிர்த்தியடைய அவகாசமிருக்குமென்பதாகத் தோன்றாது. அதுவுமல்லாமல், இப்போதைய நாகரீகம் அந்த அத்யாத்மிக மார்க்கத்திற்கு முரணாகக்கூட ஏற்பட்டிருக்கிறது. ஆராதனத்திற்கு விநியோகிக்கும் சொல்பகாலத்திலாவது, மனதை முறணான மார்க்கத்தினின்று திருப்பி, அந்தர்முகப்படுத்தி அந்தரங்கத்திலுள்ள குறைவற்ற சக்தியினின்று கொஞ்சம் கொஞ்சம் சக்தியை வெளிப்படச் செய்வோம். அத்யாத்மிக ரகஸ்ய தத்துவங்களால் நாம் அதைவிட ஒருபடி மேல் ஸ்தானத்திற்குச் செல்வோம்.

ஆராதனைக்கிரமங்கள், ஸம்ஸ்கார கிரமங்கள், சாதாரணமாய் சில ஆக்ஷேபங்களுக்கு உள்படுகின்றன. பிரகிருதி

பந்தமாயுள்ள இக்காலத்தில் வெகு பெயர்கள் எவ்வித மான ஸம்ஸ்காரத்திற்கேனும் பிரதிகூலர்களாகியிருத்தல் நீங்கள் அறிந்த விஷயமே. அப்படிப்பட்டவர்கள், தாங்கள் ஈசுவர தத்துவத்தை ஆராதிப் போமென சொல்வதுண்டு. இவ்விஷயமாய் விரிவாய் ஆராய்ச்சி செய்தல் நல்லதேயொழிய இப்பொழுது அதற்கு அவகாசம் போதாது. இவ்வாதத்திற்கு சாமாதானம் என்னவெனில்—நாம் இந்தவியக்தபிரபஞ்சத்தில் உள்ளகாலத்தை, நாம் விக்தாதீதர்கள் ஆகும் வரைக்கும் நமக்கு ஒரு ரூபத்தோடு சம்பந்தமில்லாமல் தீராது. வியக்தாதீத தெசை நமக்கு இன்னும் வெகுதூரத்தில் இருக்கின்றது. நாம் செய்யும் பிரதிகாரியமும் பிரதிசங்கற்பமும், பிரதிபாவமும் ஏதோ ஒரு விதமாயுள்ள ஓர் ரூபத்தில் பற்றியேயிருக்கும், நன்றாய் போதப்படுத்திக் கொண்டு செய்த ஆராதனையில் அவ்வித ரூபங்களை சாஸ்திரானுசாரமாய் உபயோகிப்பதும் நமது ஜீவிதம் எவ்வித ரூபங்களின் மூலமாய் வெளிப்படக்கோருவோமோ அவ்வித ரூபங்களை சங்கற்பித்துக் கொள்ளத்தகும்.

ஸம்ஸ்காரங்களின்நோக்கம் இதுவெனத்தெரியின், இன்றைய ஆராதனகிரமங்களை அனுஷ்டிக்கவேண்டியதேயொழிய கட்டோடே ரூபஆராதனையை நிராகரித்தல் சாத்தியமாயினும், அவ்விதம் செய்யவொண்ணாதென்பது புலப்படும். மேலும், உலகத்தில் ஏழாங்கிரணத்தின் சக்தி உச்சத்தை அடைந்து வருகிறதென்று கூட கெவனிக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொருகிரணமும் ஒன்றின்பின் ஒன்றாய் உலகத்தைக் காப்பாற்றிவரும். இனிவரப்போவது ஸம்ஸ்கார கிரணமான ஏழாவது கிரணமாகும். ஆனதுபற்றி இந்த ஸம்ஸ்காரங்களைக் குறித்து நாம் பூர்த்தியாகதெரிந்துகொண்டு அவைகளை எவ்விதம் செய்யின் விசேஷ பிரயோஜனமுண்டாகுமோ அதை அறிந்திருத்தல் நன்று. ஏனெனில், இனி வரப்போகும் ஆராதனைமுறை கிரமமாய் ஸம்ஸ்கார ரூபத்தைக் கைக்கொள்ளும்.

ஸம்ஸ்காரங்களைக் குறித்துச்செய்யும் ஆக்ஷேபணைகளுக்கு காரணமென்னவெனின், நாமிப்பொழுது கேவலம்



லோகாயதபந்தமாயுள்ள காலத்திலிருக்கிறோம். நமது பூர்வீகர்கள் நாள்முதல் வந்துகொண்டிருக்கும் ஸம்ஸ்காரங்கள் இகலோக ஹேதுவாதங்களின்பேரில் மாத்திரம் ஆதாரப்பட்டிராமல், பரலோக சம்பந்தம்கூட ஏற்பட்டிருக்கும். ஆனதால் ஸம்ஸ்காரங்கள் நடத்தியபொழுது அவைகள் இந்த லோகத்தில் மாத்திரமேயல்லாமல் ஊர்த்வலோகங்களிற் கூட பலத்தை உண்டாக்கும். அந்த ஊர்த்வலோகங்களைக்குறித்து இப்பொழுதுள்ளவர்கள் அறியார்கள். மனிதன் அவ்வித ஊர்த்வலோகங்கள் இருக்கின்றனவென்பதாகவும், நாம் அந்த ஊர்த்வலோக சம்பந்தங்களாயுள்ள சரீரங்களில்— ஆன்மாவின் சூக்ஷ்ம உபாதிகளில்-வசிக்கிறோமென்பதாகவும், தெரியும் வரையில், அவனுக்கு இந்த ஸம்ஸ்கார ரகஸ்யதத்துவத்தைக்குறித்துத் தெரியவே தெரியாது. இப்பொழுது பெரியமதங்கள் எல்லாவற்றிலும் அநாதியாக ஆசார சித்தமாக வந்துகொண்டிருக்கும் ஸம்ஸ்காரங்களைக் குறித்து, நமக்கு பிர்ம்மஞானஸபையார் சொல்லியவரைக்கும் தெரியவேயில்லை. அதனால் அந்த ஸனாதனமாயுள்ள ஸம்ஸ்காரங்களைப் புனர் உத்தாரணஞ்செய்து, அவைகளை இக்காலத்திய காலதர்மத்திற்கு அனுகுணமாய் மாற்றும்வேலை பிர்ம்மஞானஸபையார் பேரில் விழுந்தது. இனி அத்யாத்ம ரஹஸியதத்துவங்களை அவலம்பிப்பதில் இந்த ஆராதனையை வெகு உத்கிருஷ்டமாயும், வீர்யமாயும் நடத்தவேண்டியிருக்கிறது. ஆனதால் அந்த ரஹஸிய தத்துவங்களைப் புனர் உத்தாரணம் செய்யச் சாத்தியமாவதற்காக நாம் என்னசெய்யவேண்டுமோ அதை யோசிக்கவேண்டியிருக்கிறது.

(1) பிரம்மஞான சபையால் துவக்கப்பட்ட வித்யாமுறை, (2) ஸ்திரீ புருஷர்களுக்கு பிரவேசத்திற்கு யோக்கியமாயுள்ள கோமேஸன்ரி ஏற்பாடு, (3) பூர்வகிறிஸ்தவ ஸம்ஸ்காரங்களையே அவலம்பிக்கினும், அவைகளைக்குறித்தும் கிறிஸ்தவமத பிரயோஜனத்தைக்குறித்தும் பிரம்மஞான ஸம்பிரதாயானுசாரமாக போதித்துவரும் லிபரல் காதோலிக்சர்ச்சு. இம்மூன்று ஹேதுக்களைக் குறித்தும் ஆலோசிக்கவேண்டிய

தென இதன் மத்தியிலேயே ஸபையார்கள் கோரப்படுவதும், இந்த ஹேதுக்களை அபிவிர்த்தி செய்வதற்கு பிரம்மஞான சபையார்கள் உடன் படுவார்களென சூசிப்பிக்கப்பட்டதாகவும் நீங்கள் அறிந்த விஷயமே. லிபரல் காதோலிக்சர்ச்சு கிறிஸ்தவமதத்தில் செய்துகொண்டிருக்கும் வேலை பிரதிமதங்களிலும் கூட செய்து, அவைகள் எல்லாவற்றிலும் ஏதோ ஒருவிதமாய் அந்த அத்யாத்மிக ரஹஸ்யதத்துவங்களைப் புனர் உத்தாரணம் செய்வதற்கு சாத்தியமாகும் வண்ணம் செய்யவேண்டியிருக்கிறது. அதை சாதிப்பதற்கு முதல் முதல் நாம் செய்யவேண்டிய தென்னவெனில், இதுவரையில் நாம் தெரிந்துகொண்ட விஷயங்களில் விசேஷ ஸாமர்த்தியத்தை சம்பாதித்தலேயாம். நமது பிரம்மஞான சம்பந்தமான உபந்யாசங்களிலும், ப்ரீமேஸன்றி ஸம்ஸ்காரங்களிலேயும், வித்யாவிஷய காரியங்களிலும் எவ்வளவோ அபிவிருத்தி செய்வதற்கு இன்னும் அவகாசம் இருக்கின்றது. இனிமேல் மதசம்பந்தமான ஆராதனைகளில் நடக்கவேண்டிய—நடந்துவரும்—மாற்றம் என்னவெனின், வந்தவர்கள் வீணில் பார்த்துக்கொண்டிருக்க, ஆச்சாரியன்மாத்திரம்ஆராதனைசெய்வதுநின்றுபோய், தம் தம் எண்ணங்களையும், பாவங்களையும் யுக்தமாய் உபயோகிப்பதற்குத்தகுந்த சிக்ஷையையடைந்த எல்லோரும் சேர்ந்து நன்றாய் சிக்ஷயடைந்துள்ள ஆச்சாரியனோடு சேர்ந்து எல்லோரும் ஆராதனத்தில் ஈடுபடுவார்கள். இவ்வொழுக்கம் சிறிதுமட்டும் லிபரல் காதோலிக்சர்ச்சில் அவலம்பிக்கப்பட்டுவருகின்றது. அங்கு வந்தவர்களெல்லாம் ஆராதனையில் ஒரேமுகமாய் ஈடுபடுவதற்குவேண்டிய உத்ஸாகத்தை அளிக்கிறார்கள். இவ்விதம் செய்வதால் எங்கள் அனுபவத்தில் கண்டுபிடித்தது என்னவெனின், எல்லோரும் அவ்விதம் ஆராதனையில் ஈடுபட்டமாத்திரம், ஆராதனம் அத்யாத்மிக சக்திகள் பிரவஹிப்பதற்குப் பெரிதும் நல்லதுமான பிரவாஹமாகின்றது. இதன் மத்தியில் சிலநாட்களாக அடையாற்றில் நிகழ்ந்துவரும் ஹிந்து தேவாலயத்தில் ஆராதனையில்கூட இம்முறை அவலம்பிக்கப்பட்டுவருகின்றது.



இதுவுமன்றி, இந்த அத்யாத்மிக ரஹஸ்யதத்துவங்களை உத்தாரணம்செய்யும் மார்க்கங்கள், இன்னும் சிலஉள. முதலாவது, மானிடர்கள் தங்கள் ஜன்மஸ்தானத்திற்கு மீளவும் சேர்வதற்காக உலகில் ஆங்காங்கு சில கேந்திரஸ்தானங்களை ஸ்தாபிக்கவேண்டும். அங்கு கல்விபயிலும் வித்யார்த்திகள் சென்று தங்கள் அபிவிர்த்திக்காக பலவித காரியங்களைக் கற்றுக்கொள்ளுவார்கள்; அவர்களின் ஸ்தூல சரீரங்களின் துவாரா அத்யாத்மிகசக்திகள் தடையின்றிப் பிரவஹிப்பதற்குத்தகுந்தப்படி அந்த சரீரங்களுக்கு பயிற்சிகொடுப்பதற்குத்தகுந்த ஏற்பாடுகள் அங்கு செய்யப்படும். மேலும் சௌந்தரிய பிரகாசமாயுள்ள விருப்பங்களுக்கு அங்கு பயிற்சியைக் கொடுக்கும் பாடசாலைகள் இருத்தல்வேண்டும். இப்போதைய நாகரீக அவஸ்தையில் மனோபாவங்களுக்குச்சரியான பயிற்சியைக்கொடுத்தல் எங்கும் காணப்படவில்லை. அத்யாத்மிக ரஹஸ்ய புனர் உத்தாரணத்திற்காக ஸ்தாபிக்கும் கேந்திரஸ்தானங்களில் அப்பியாச முறைகளில் வித்யார்த்திகள் தமது அந்தரங்கசக்திகளைத் தகுந்த மார்க்கங்களில் நிர்ணயித்து, அவைகள் தமது பல உபாதிகளில் உத்தமமார்க்கங்களின் துவாராபிரவஹிக்கும் வண்ணம் செய்யக்கூடிய நல்ல ஆத்மபிரகாசம் உண்டாவதற்குத்தகுந்த பயிற்சி விதிக்கப்படும். மனிதன் அபிவிருத்தி செய்துகொள்ளக்கூடிய அந்தர்முகசக்திகளையெல்லாம் விர்த்திசெய்தல், இங்கு வெகு அபூர்வமாய் சாத்தியமாகுமே ஒழிய, சாமான்யமாய் இக்காலத்திய நகரங்களில் நடத்தக்கூடியகாரியமன்று. உலாந்தா தேசத்தில் ஹூய்ஜன் நகரத்தில் கேந்திரஸ்தானத்தில் மானிடர்களுக்காக வித்யாஸ்தானமிருப்பதுமல்லாமல், மானிடர்களுக்கு தேவதைகள் ஈடுபடக்கூடியவண்ணம் பயிற்சியளிப்பதற்குக் கூட பாடசாலை இருக்கின்றது. ஏழாங்கிரணத்தின் பிரகாசம் விர்த்தியாவதற்குத்தக்கவாறு, தேவதைகள் மானிடர்களுக்கு விசேஷ துணைவர்களாகும் வண்ணம் கற்றுக்கொள்ளல்வேண்டும். அதைக்கற்றுக்கொள்ளல் தேவதைகளுக்கு ஹிதமானகாரியமல்ல வானபடியால் அவர்கள் கற்பது ஒரு தியாகமாக எண்ணவேண்டியது. நாம் அவர்க

ளோடு துணைவர்கள் ஆவதற்காக எவ்விதம் பயிற்சியையடையவேண்டுமோ, அவ்விதமே அவர்களும் நமக்கு துணைவர்கள் ஆவதற்கு பயிற்சியை அடைதல்வேண்டும்.

புதுயுக நாகரீகத்திற்கு ஸர்வஸகோதரத்வம்—அதாவது எல்லோரும் பரஸ்பர ஸகாயமுடையவர்களாகி வேலைசெய்ய உண்டாதல்— மூலதத்துவம்.

அவ்விதம் எல்லோரும்சேர்ந்து பரஸ்பர அனுகூலிகளாகி வேலைசெய்தால்தான், ஸம்ஸ்காரங்களை அபரிமிதமாய் செய்யக்கடவார்கள். அந்தபிரகாரம் ஸம்ஸ்காரங்களை பரஸ்பர அனுகூலமுடையவர்களாகி, ஒன்றாகக்கூடி நடத்தக்கடவோமேயாகில் ஆனந்தமயகோசத்தில் பிரக்ஞை சுலபமாய் ஸாக்ஷாத்காரமாகும். ஜகத்குரு அவதரித்தபொழுது தனது வேலைக்கு உபயோகிப்பாரென்பதாக எண்ணக்கூடிய ஏதேனும் ஒரு சங்கத்தில்சேரும் பாக்கியம் நமக்கு லபிக்குமாக! ஆனால் நாம் அவ்வித சங்கத்தில் சேருவதற்கும், அவ்விதவேலையைச் செய்வதற்கும் அருகமுடையவர்கள் ஆகவேண்டின், ஸ்வலாபத்தை பூர்த்தியாகமறந்து, இதரர்களுக்காகவே எப்பொழுதும் சிந்தனைசெய்வதற்கு அப்பியாசம் செய்துகொள்ளல்வேண்டும்; நமது கோரிக்கைகளையும் நமது சுகங்களையும் முன்னுக்குத்தள்ளி சமஷ்டியின்பேரில் செய்யவேண்டிய வேலைக்கு விசேஷ முக்கியத்தையளிக்கவேண்டும்.

---

# *அடையார் க்ஷேத்திரமான்மியம்.

உலகில் அனேக க்ஷேத்திங்களும் அனேக தீர்த்தங்களும் உண்டு, பற்பல தேசத்தார்களுக்கும் பற்பல மதஸ்தர்களுக்கும் அனேக க்ஷேத்திரங்களையும், தீர்த்தங்களையும், அந்தந்த மதஸ்தாபகர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு மதஸ்தரும் தமக்கு ஏற்படுத்தப்பட்ட க்ஷேத்திரங்க

* தெலுங்கு திவ்யஞான தீபிகையினின்றும் பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.



ளுக்கு யாத்திரைசெய்து, அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட பூஜாக்கிரமங்களை நடத்துவதால் பாபம் நாசமாகுமென எண்ணுகிறார்கள். ஹிந்துக்களுக்கு காசி, பதரி, ஹரித்துவாரம், திருப்பதி, ஸ்ரீரெங்கம், உடுப்பி முதலான ஸ்தலங்கள் க்ஷேத்திரங்கள் தீர்த்தங்களாக நியமிக்கப்பட்டன. மகம்மதியர்களுக்கு மெக்கா மஹாக்ஷேத்திரமாக இருக்கின்றது. பார்ஸிகளுக்கு அவுத்வடா என்பதும், ஸீக்கியர்களுக்கு அமுர்தஸரோவரமும், கிறிஸ்தவர்களுக்கு ஜெரூஸலேம் என்னும் இடமும் யாத்திரை ஸ்தலங்களாக இருக்கின்றன. இவ்விதமே இன்னும் அனேக மதஸ்தர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. அனேகம்பேர்கள் விசேஷதிரவியம் செலவுசெய்துகொண்டு அனேக கஷ்டங்களுக்கு உட்பட்டு யாத்திரைகள் செய்துவருகிறார்கள்.

யாத்திரா ஸ்தானங்களிலுள்ள தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்வதால் முன்செய்த பாபங்கள் நசிக்குமென பிரமாணமுளது. தீர்த்தஸ்நாநம் செய்தவர்கள் அந்தந்த தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்வதற்கு முந்தி செய்துவந்த பாபகாரியங்களை ஸ்நாநம்செய்தபின்னரும், செய்யாமல் கட்டோடே விட்டொழிக்கின், தீர்த்த ஸ்நாநத்தால் பாபம் நசிக்குமென சொல்லக்கூடுமேயொழிய, ஸ்நாநத்திற்கு பூர்வம் இருந்தது போலவே எம்மாத்திரமேனும் மாறாது இருந்தால் பாபம் நசிக்குமென் எவ்விதம் சொல்லக்கூடும்?

தீர்த்த யாத்திரைசெய்த சிலர்க்கு தம்மதத்தில் துரபிமானமும், இதர மதங்களிடத்தில் துவேஷமும், தமக்கு கர்வமும் அபிவிர்த்தி ஆதலுமுண்டு. தீர்த்த க்ஷேத்திரங்களிலுள்ள அர்ச்சகர்கள், பண்டாக்கள், தீர்த்தவாஸிகள் முதலாயுள்ளவர்கள் யாத்திரைக்காக வந்தவர்களிடமிருந்து எத்தனை விதங்களில் திரவியம் பிடுங்கமுடியுமோ அத்தனை விதங்களில் பிடுங்குவார்களே ஒழிய, யாத்திரைக்காரர்கள் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு, செலவு செய்துகொண்டு புண்ணியம் பெறவேண்டுமென வந்தார்களே, இவர்களுக்கு எவ்விதத்தில் நல்லபலன் பிராப்தமாகும்படி செய்யவேண்டுமென

நினைப்பவர்கள் கட்டோடே இல்லை. யாத்திரைக்காரர்கள் "ஏன் இங்கு வந்தோம்" என நொந்து கொள்ளும்படி செய்வார்கள். மேலும் அர்ச்சகர்கள் தேவாலயங்களில் செய்யும் அகிருத்தியங்களால் யாத்திரையாக வந்தவர்களுக்குள்ள பக்தியும் நசித்தாலும் நசிக்கலாம். ஒரு பிரஸித்த தேவாலயத்திலிருந்த அர்ச்சகர்கள் செய்துகொண்டிருந்த துஷ்கிருத்தியங்களை நான் பிரத்தியக்ஷமாக பார்த்தபடி விவரிக்கின்றேன்.

நான் பார்த்த தேவாலயத்திற்கு வருஷப்பிறப்பு தினத்தில் ஆயிரக்கணக்கான யாத்திரைக்காரர்கள் வருவார்கள். அனேகமாயிரக்கணக்கான தேங்காய்கள், ஸ்வாமிக்கு ஸமர்ப்பிப்பார்கள். அந்தத் தேங்காய்களை எல்லாம் உடைத்து, ஸ்வாமிக்கு நிவேதித்து, பாதிபாகம் பிரஸாதமாக தேங்காய் கொடுத்தவர்களுக்குக்கொடுத்து மீந்தவற்றை அர்ச்சகர்கள் வைத்துகொள்ளல் வழக்கம். இவ்வழக்கத்தை அனுஸரியாமல் அர்ச்சகர்கள் இரண்டு தேங்காய்கள் கொடுத்திருந்தபொழுது ஒரு தேங்காயை மாத்திரம் உடைத்து மற்றொன்றை அப்படியே வைத்துவிட்டு, உடைத்த தேங்காயின் இரண்டுபாகங்களையும் கொடுத்தவனுக்குக் கொடுத்தார்கள். இதனால் ஆயிரம் தேங்காய்களை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யக்கொடுத்திருந்தால் ஐந்நூறுகாய்களை அர்ச்சகர்கள் உடனே விற்றுவிடுவார்கள். இவ்விதம் எல்லோருடைய எதிரில் செய்வார்கள். இவ்விதம் அர்ச்சகர்கள் ஸ்வாமி சன்னதியிலேயே செய்வதை யாத்திரைக்காரர்கள் பார்ப்பதால் அவர்களுக்குள்ள பக்தி போய்விடும். தேவாலயங்களில் தீப ஆராதனைக்காக யாத்திரைக்காரர்கள் கொடுத்த நெய்யில் அரைக்கால் பாகம்கூட ஸ்வாமியின் தீபத்திற்கு உபயோகிக்கப்படமாட்டாது, எல்லாம் அர்ச்சகர்களுடைய வீட்டுக்கும் கடைகளுக்கும் போகும்.

இன்னும் கயா, காசி முதலான யாத்திரை ஸ்தலங்களில் அனுபவிக்கும் கஷ்டங்களுக்குக்கணக்கே இல்லை. புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வீட்டைவிட்டு வந்தவர்கள் சாந்



தம், நிர்மல மனோபாவம், பக்தி ரஸாதிசயம், தயாகுணம், பிரேமாபிவிர்த்தி இவைகளை அடைவதற்கு மாறாக அர்ச்சகர்களிடம் குரோதம், மனோவியாகூலம், பக்தி குறைவு, காடின்னியம் இவைகளை அடைவார்கள். காஞ்சீபுரம், ஸ்ரீரெங்கம் முதலான வைஷ்ணவ தேவாலயங்களில் வடகலை தென்கலை கலகங்களால் உண்டாகும் அனர்த்தங்களைப் பார்ப்பதால் எவர்களுக்குத்தான் தேவாலயங்களில் பக்திநிலைக்கும்?

இதுவுமன்றி, இதர தேசஸ்தர்கள் தத்வக்ஞர்களாயும், தேவாலயங்களுடையவும் தேவ பிரதிஷ்டை விஷயமாயும் உள்ள ரகசியங்களைத்தெரிந்து கொண்டவர்களாயும், பக்தி விசுவாசங்கள் உடையவர்களாயும், ஸ்தலமஹத்வத்தை உள்ளபடி தெரிந்து கொண்டவர்களாயிருக்கினும், அவர்களை தேவாலயங்களில் பிரவேசிக்க விடார்கள். இவர்கள் நிஜமான பக்தி உள்ளவர்களாக இருப்பதால் இவர்களிருக்கும் இடத்தில் பகவான் பிரசன்னராக இருப்பார். இவ்வித மஹான்களை தேவாலயங்களுக்குள் செல்லவிடாமல், எவ்வளவு பாபியானாலும் தம் ஜாதியானாகவிருந்து திரவியத்தை விசேஷமாக கொடுக்கும்போதெல்லாம் அவனை கர்பக்கிரஹத்திற்கு சமீபத்தில் செல்லவிடுகிறார்கள். இதுவுமன்றி இன்னும் எத்தனையோ அகிருத்தியங்கள் நிகழும்.

இங்கு மேலெழுதியவற்றினின்று, தேவாலயங்களையும், தீர்த்தக்ஷேத்திரங்களையும், அர்ச்சகர்களையும், தர்மகர்த்தர்க்களையும், தீர்த்தவாசிகளையும், தூஷிக்கவேண்டுமென்றாவது, பிழைகள் கண்டுபிடிக்கவேண்டுமென்றாவது இதை எழுதுபவனுடைய உத்தேசமன்று. அங்கு இருக்கவேண்டிய உத்தமோத்தம சந்தர்ப்ப சன்னிவேசங்களுக்கும், இப்பொழுதுள்ள அத்யந்த நிகிர்ஷ்ட ஸ்திதிக்குமுள்ள தாரதம்மியத்தை வெளியிடுவதன் துவாரா, மஹான்களான நமது முன்னோர்களின் பூர்வமுறைகளை புனர் உத்தாரணம் செய்வதற்கு அவகாசங்கள் உண்டாகட்டுமென்பதே உத்தேசம். சிரத்தையுள்ள ஆஸ்திகர்கள், இவ்விஷயத்தை நிரம்பவும் மனதில் வாங்கி, இப்போதுள்ள ஸ்திதிகளை செம்மைப்படுத்துவதற்

கும், தீர்த்தக்ஷேத்ர ஆலயங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் தீவிரமாய் எத்தனிக்கவேண்டும்.

அடையார் க்ஷேத்திரத்தைக்குறித்து விசாரிப்போம். இதர க்ஷேத்திரங்கள் ஒரு வகுப்பு, ஒரு ஜாதி, ஒருதேசஸ்தருக்கு யாத்திரைஸ்தலமாக இருக்கின்றன. அடையார்க்ஷேத்திரமானது, ஸகல தேசஸ்தர்களுக்கும் ஸகல மதஸ்தர்களுக்கும் யாத்திரைஸ்தலமாக இருக்கின்றது. கடந்த பிரம்மஞான ஸபையின் ஐம்பதாம் வருஷோத்ஸவத்திற்கு நமக்குத் தெரிந்துள்ள ஸமஸ்ததேசத்தார்களும் ஸர்வமதஸ்தர்களும் இங்கு சேர்ந்திருந்தார்கள். இந்துக்களில் சகல வர்ணத்தார்களும், பௌத்தர்களும், பாரசீகர்களும், மஹம்மதியர்களும், கிறிஸ்துவர்களும், யூதர்களும், ஜெயினர்களும், ஸீக்கியர்களும் வந்திருந்தனர். இவ்வளவு மதஸ்தர்களில் முக்கியமாயுள்ளவர்கள் ஒரு இடத்தில் சேர்ந்து ஏகபீடத்தின்பேரில் தம்தம் மதங்களின் வேதங்களில் உள்ள மந்திரங்களை பாராயணம் செய்துகொண்டு பகவத் தியானத்தை செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பாராயணகாலத்தில் எம்மாத்திரமும் த்வேஷபாவமாவது, பரஸ்பர திரஸ்கார உபேக்ஷை பாவங்களாவது இல்லாமல், அன்னியோன்னிய கௌரவபக்தியோடு கூடினவர்களாய் கேட்டுக்கொண்டிருந்தார்கள். வெவ்வேறு மதங்கள் பகவானை அடைவதற்கு வெவ்வேறு மார்க்கங்களென்ற நிச்சயபுத்தியுடன் நிறைந்து வியவகரித்துவந்தார்கள்.

உலகத்தில் மதத்வேஷத்தால் உண்டாகும் அனர்த்தங்களை விட வேறு அதிகமாக எதுவுமில்லை. இதனால் மட்டுக்கு மிஞ்சியே கொலைகள் ஹிம்சைகள் இன்னுமனேகங்களாயுள்ள உபத்திரவங்கள் சம்பவித்திருக்கின்றன. இப்பொழுதும் மதங்களிடத்துள்ள ராகத்வேஷத்தால் அனர்த்தங்கள் உண்டாகிவருகின்றன. ராகத்வேஷங்களே ஸகலவிதமான பாபங்களுக்கும் காரணம். இவ்விதம் மஹாபாபத்திற்கு ஆஸ்பதமாயுள்ள ராகத்வேஷங்களை விட்டொழித்து, உலகத்திலுள்ள வெவ்வேறு ஸமஸ்த மதஸ்தர்களும் ஒரு ஸ்தலத்தில் எல்லோருக்கும் ஸமானமானவராயுள்ள பரமேசுவரனை கௌரவிச



வாச பக்திகளால் ஸ்துதிக்கப் பிராப்தமாவதைவிட புண்யகர்மம் வேறு என்ன இருக்கிறது?

இது அடையார் க்ஷேத்திரத்தில் நேரிட்ட சம்பவம். பாபங்களில் க்ரூரபாபங்களான ராகத்வேஷங்கள் க்ஷீணமாகிவிட்டதானபடியால், அடையார்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தவர்களுக்கு ("தீர்த்தஸ்நாநாது சுகக்ஷயம்") என்னும் பாரத வாக்கியம் அன்வயிப்பதற்கு சம்சயமில்லை. எல்லாப்புண்ணிய நதிகளுக்கும் பிரவேசஸ்தானமான சமுத்திரதீரத்தில் இந்த க்ஷேத்திரம் ஸ்தாபனம் செய்யப்பட்டது.

இந்த க்ஷேத்திரம் எல்லாமதஸ்தர்களுக்கும் யாத்திரைஸ்தலமாக இருப்பதுபற்றி, எல்லாமதஸ்தர்களுக்கும் தகுந்த பூஜாஸ்தோத்திர மந்திரங்கள் நிருமிக்கப்பட்டன. ஹிந்துக்களுக்கு தேவாலயமும், மஹம்மதியர்களுக்கு மஹஜிதும், கிறிஸ்தவர்களுக்கு கத்தீட்ரலும், பௌத்தர்களுக்கு பௌத்த தேவாலயமும், அக்னிபூஜை செய்பவர்களான பாரஸீகர்களுக்கு அவர்களது தேவாலயமும், யூதர்களுக்கு அவர்களது ஸ்தோத்திரமந்திரமும் சில கட்டப்பட்டன. மிகுந்தவைகள் கட்டப்பட்டுவருகின்றன.

இங்கு பக்தர்கள் எல்லோருக்கும் பிரவேசமுண்டு. இதர தேவாலயங்களைப்போல், இதர தேசஸ்தர்களும், இதர மதஸ்தர்களும் அவர்கள் எவ்வளவு பக்தியுள்ளவர்களானாலும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கவிடாமல் செய்வதும், தம் மதஸ்தர் எவ்வளவு பக்திக்குறைவுள்ளவராயினும் எவ்வளவு துராசாரமுள்ளவராயினும் அவர்களைப் பிரவேசிக்கச் செய்வதும் ஆகிய வழக்கம் இங்கில்லை. இங்கு சிரத்தாபக்தி முக்கியமேயொழிய, தேசகுல வர்ணங்கள் முக்கியமன்று. அனேகர், ஐரோப்பாமுதலான பரதேசஸ்தர்களும் மற்ற மதஸ்தர்களும் ஹிந்துதேவாலயத்திற்கு பூஜாசமயத்தில் வருகிறார்கள். வரும்பொழுது தங்கள் பாதரக்ஷைகளை தேவாலயப் பிராகாரத்திற்கு வெளியில் விட்டு, கால்களை அலம்பிக்கொண்டு தேவாலயத்தின் சமீபம் செல்வார்கள். பூஜாசமயத்தில் கேவல சிரத்

தாபக்தி விசுவாசங்களாலே ஹிந்துசகோதரர்களோடு பூஜை செய்வதில் ஈடுபடுவார்கள். அந்த சமயத்தில் அவர்களுடைய முகபாவத்தைப்பார்க்கின், பக்திரஸம் ததும்பக்காணப்படும்.

இவ்வித பக்தர்கள்கூடி மந்திரங்கள் உச்சரித்து பூஜைகள் நடத்துமிடத்தில், ஆவாஹனம் செய்யப்பட்ட தேவதைகள் எல்லோரும்வந்து, பூஜைகளைக் கைக்கொண்டு, திருப்தியடைந்து, யுக்தமானபலன்களை அளிப்பார்கள். "ஊஹகாரீய தாமாயஜேத த்ருதிஷாதி நாரஷ" என பகவத்வாக்கியம் உளதன்றே! பக்தர்கள் இருக்குமிடம் ஈசுவரன் தப்பாமல் இருப்பாரே யொழிய, பக்திஹீனர்களுடைய சமீபத்தில் இருப்பரோ? இதுவுமன்றி, பூஜாகாலத்தில் உபயோகிக்கும் மந்திரங்களின் அர்த்தமெல்லாம் தெளிவாய் எடுத்துச் சொல்வார்கள். பூஜையையும் விதிக்கிரமங்களை அனுசரித்துச் செய்வார்கள். எக்கர்மத்திற்காகட்டும் விதி காலக்கிரமங்கள் பிராணனைப்போலொத்தது. விதி காலக்கிரமங்களை விட்டுச் செய்யும் கர்மம் பிராணனில்லாத உடலைப்போலிருக்கும்.

பூஜைமுடிவில், முக்கிய அர்ச்சகர் முதலில் உலகத்திற்கெல்லாம் க்ஷேமமுண்டாகக்கூடியதாய் ஆசீர்வதிப்பார். பின்னர் பூஜிக்கவந்தவர்களெல்லாம் ஒரே மொழியாக இந்தப் பூஜாபலம் மூன்றுலோகங்களுக்கும் சமஸ்த மானிட சதுஷ்பாத ஜந்துக்கள்முதலிய எல்லா ஜீவராசிகளுக்கும், எவ்வித கஷ்டமுமில்லாமல் ஆனந்தமுண்டாகட்டுமென்பதாக வாழ்த்தி, எல்லாம் பிரம்மார்ப்பணமாகக்கடவது என்பதாக முடிப்பார்கள்.

கொஞ்சமேனும் ஸ்வலாப அபேக்ஷையில்லாமல், சிரத்தாபக்தி விசுவாசங்களாலே உலக க்ஷேமத்திற்காகச் செய்த கர்மத்தால் லோகக்ஷேமம் எவ்விதம் ஆகாமற்போகும்? இக்கர்மத்தை நடத்தும்பொழுது, திவ்ய திருஷ்டியுள்ளவர்கள் பார்த்து பூஜையின் கர்மபலன் வெகுதூரம் வியாபித்ததென்றும், மந்திரோச்சாரணத்தோடு நிர்மாணமான ரூபங்களின் த்வாரா தேவதைகள் தங்கள் ஆசிர்வாத அனுக்கிரஹங்களை உலகிற்கு வியாபிக்கச்செய்தார்களென்றும் சொன்னார்கள்.



இவ்விதமாகவே, கிறிஸ்தவ சர்ச்சில் பூஜைநடக்கும்பொழுது, ஹிந்துக்களும் சென்று சிரத்தா பக்திகளுடன் அவர்களுடைய பூஜையில் கலந்து, தீர்த்தப்பிரஸாதங்களை ஸ்வீகரித்துக்கொண்டிருந்தார்கள். இதனால் பரஸ்பரமததிரஸ்கார த்வேஷங்கள் குறைந்து, அன்னியோன்ய கௌரவ ஸமத்வபாவங்கள் உற்பத்தியாகி விர்த்தியாகும். இதனால், அபிமான அகங்கார ராக த்வேஷங்கள், மதவைஷம்யங்கள் எவ்வளவுதூரம் நாசமடைந்ததென்பதை இதைப்படிப்பவர்கள் ஊகிக்கக்கடவார்கள். இங்குள்ள க்ஷேத்திரவாசிகளில் முக்கியர்கள் யதார்த்தமான அந்தரங்க பரமஹம்ஸர்கள், யாத்திரைக்காரர்களிடமிருந்து திரவியம் பிடுங்குகிறவர்களன்று. அநேக உபந்யாஸங்கள் அளித்து, க்ஷேத்திர, க்ஷேத்ரக்ஞ பரமாத்ம ஞானத்தைப் போதித்து, எல்லோரையும் ஆத்ம விசாரபரராயும் பிரம்ம விசாரபரராயும் செய்வார்கள். யாத்திரைக்காரர்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் செல்லும்பொழுது, இங்கு கேட்டு அடையப்பெற்ற ஞானமெல்லாவற்றையும் அவரவர் பிரதேசங்களில் வியாபிக்கச்செய்து, ஜனங்களை சன்மார்க்க பரராய்ச்செய்தல் அவரவர் முக்கியகடமையென் சொல்லுவார்களேயொழிய, திரவியம் கொடுவென்று சொல்லமாட்டார்கள். (இன்னும் வரும்.)

## குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

பிரம்மஞான ஸங்கத்தார்க்கும் உதய க்ஷேத்திர சங்கத்தார்க்கும் மேமீ மானது ஓர் விசேஷமான மாதமாகும். பிரம்மஞான ஸபையை இவ்வுலகினில் முதன்முதல் ஸ்தாபித்தஇருவரில்ஒருவரானருஷியா தேசத்தின்ராகியமாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் 1891௵ மேமீ 8ௗ தன் சரீரத்தைவிட்டு வெளியேகினர். இந்தப்புண்ணிய தினத்தை பிரம்மஞானக் கிளைச்சபைகளுள்ள இடங்களிலெல்லாம் விசேஷ உற்சாகத்துடன் கொண்டாடுவது வழக்கம். தாம் ஸ்தாபித்த பிரம்மஞான ஸபையை இன்றும் அதிக மேன்மைபெறும்படியாய்ச் செய்யும்பொருட்டு மறுபடியும் இப்போது ஒரு புருஷ சரீரம் எடுத்திருக்கிறாரென்றும் சீக்கிரம் வெளிப்படுவார் என்றும் திவ்ய திருஷ்டியுள்ள அறிஞர்கள் சொல்கிறார்கள்.

மேமீ 25வ உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் தலைவரான ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பிறந்ததினம். இதையும் விசேஷ உற்சாகத்துடன் கொண்டாடுவார்கள். உதயதிசை நக்ஷத்திரசங்கத்தைச் சேர்ந்தமெம்பர்கள் இந்த மே—மாதத்தை Selfdenial மாதம் என்று ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் செய்துவரும் அதிகப்படியான செலவுகளைக்குறைத்து அந்தத்தொகைகளைச்சேர்த்து மாதமுடிவில் தலைமைஸ்தானமான அடையாற்றுக்கு அனுப்புவதாக ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இப்படி அனுப்பப்படும் தொகைகள் உதயதிசை நக்ஷத்திரசபை சம்பந்தமான செலவுகளுக்கு உபயோகிக்கப்படும். எல்லாமெம்பர்களும் விசேஷ சிரத்தையுடன் இப்பெருங்காரியத்தை நடத்திப்பயனடைவார்களென்று நம்புகிறோம்.

மேமீ 27வ யில் இவ்வருஷத்தில் வைசாகபௌர்ணமி எனும் புண்யதினம் வருகிறது. இந்ததினத்தில் ஸ்ரீபுத்தபகவான் ஸமாப்தியடைந்தார். இந்த தினமானது மகாசிரேஷ்டமானதினம் ஹிமாசலத்தில் அன்று மஹரிஷிகளின் கூட்டம் நடைபெறும். ஸ்ரீபுத்தபகவானின் ஆசீர்வாதம் இவ்வுலகில் அன்று பிரவஹிக்கும்.

* * * * *

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்கள் இம்மாதம் 8வ ஸ்ரீமான்களான ஜி. கிருஷ்ணமூர்த்தி, D. இராஜகோபலாச்சாரியார், யதுநந்தன் பிரஸாது இவர்களுடன் இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். இந்தத் தளர்ந்த வயதில் இவரது ஊழியம் ஆச்சரியகரமானது. உலகமுழுதும் ஒருமிக்க இப்புண்ணியரைப் போற்றி வழிபடும் காலம் அதிக சமீபத்திலிருக்கிறதென்று நம்புகிறோம்.

## பத்திரிகை வரவு.

கிருஷிகன் எனும் ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை வாங்கிப் படிக்கவேண்டுமென்று எடுத்துக் கூறவும் வேண்டுமோ? கிருஷிகனில், விவசாயிகளுக்குப் பெரிதும் உபயோகப்படக்கூடிய நுண்ணிய விவரங்கள் பல வெளி வருகின்றன. வருஷ சந்தாவும் ரூ ஒன்றுதான். அபிமானிகளான சகல நண்பர்களும் வாங்கி வாசித்துப் பயனடைவார்களென நம்புகிறோம்.

கிடைக்குமிடம்:—

கிருஷிகன் ஆபீஸ், ஜெகந்நாத பாக், சைதாப்பேட்டை.



குறிப்பு:—இச்சூத்திரத்தால் லௌகிக வைதிக கர்மங்களைக் கட்டோடே விட்டொழித்தல் தகாது என்று தெளிவாகிறது. நம்மவரில் இப்போது நடைபெறும் வைதிக கர்மங்களுக்கும் லௌகிக கர்மங்களுக்கும் கொஞ்சமும் சம்பந்தமிருப்பதாகத் தோன்றவில்லை. வைதிக கருமங்கள் செய்யுங்கால் மன நேர்மையைச் சேகரித்துக்கொண்டு அந்நேர்மையுடனேயே மற்ற தொழில் யாவையும் கொண்டு செலுத்த வேண்டுமென்பது விதி. அவ்விதமின்றி உலக வழக்கில் விபரீதமான ஆசரணைகளை வைத்துக்கொண்டு வைதிக கர்மங்களைமட்டும் பலர் செய்கிறார்கள். அது வேஷமாத்திரமானது. பக்தர்கள் செய்வது என்னவெனில், லௌகிக வைதிக கருமங்களை பக்தியின் லக்ஷியத்திற்கு ஏற்ப நேர்மையாய் நிறைவேற்றுவார்கள். அன்பு அல்லது பக்திக்கு மாறான ஒன்றையும் அவலம்பிக்க மாட்டார்கள். உலகத்திலுள்ள நாநாவிதமான பக்குவிகளுக்கு நாநாவித மார்க்கங்கள் வேதங்களில் விதிக்கப் பட்டுள்ளன. பக்தி அல்லது அன்பிற்கு ஒவ்வாத ஆசரணைகளை பக்தர்கள் கைக்கொள்ளலாகாது.

12. भवतु निश्चयदार्ढ्यादूर्ध्वं शास्त्ररक्षणम् ॥

திடமான நிச்சயஞானம் ஏற்படும்வரை சாஸ்திரங்களைப் பரிபாலித்தல் வேண்டும்.

குறிப்பு:—சாஸ்திரங்கள் யாவும் பெரியோர்களுக்கு ஸ்வாநுபவமான விஷயங்கள். அவற்றைப் பிறருக்குப் பயன்படுத்துமாறு கிரந்தரூபமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் அவற்றைக் கைக்கொண்டு பழகித் தமக்குத்தாமே உண்மைகள் எனக்கண்டுகொள்ள முயலாதவரை அவைகளின் பயனைப் பெறமுடியாது. சாஸ்திரகாரருடைய அநுபவத்தைக்காட்டிலும் அப்பியாசியின் ஸ்வாநுபவம் வேறுபடக்கூடாதென்ற நியாயமில்லை. ஒரு அநுபவத்தையே பலர் பலவிதமாகக் கூறுவதுமுண்டு. அது அவரவர் திருஷ்டிக்குத்தக்கவாறிருக்கும். இதையெல்லாம் உத்தேசிக்கத்தன் சொந்த அநுபவமே எல்லாவற்றிலும் பெரிது. தன் சொந்த அநுபவம் ஏற்படாதவரை சாஸ்திரம் மெத்த

210803

அவசியம். அப்பியாசியை நிஜ அநுபவம் பெறும் மார்க்கத்திற் செலுத்துவதே சாஸ்திரத்தின் பரம பிரயோஜனம். அப்பியாசி வேதங்களையும் மேற்கொள்கிறபடியைப் பின்ஒரு சூத்திரத்தில் விளக்குகிறார்

13. 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑌾𑌤𑌿𑌤𑍍𑌯𑌾𑌶𑌙𑍍𑌕𑌯𑌾 ॥

இல்லாவிடில் தவறுவார்கள் (என்ற) சந்தேகம் (உள்ளது).

குறிப்பு:—மனிதனுடைய சாமானிய விவேகத்தால் கண்டு கொள்ள முடியாத பல உண்மைகளைச் சாஸ்திரங்களே நமக்குக் கூறுகின்றன வாகையால் அவைகளை அலக்ஷயம் செய்தல் ஆகாது. ஆனால் ஏட்டில் எழுதியதெல்லாம் ஸம்ஸ்கிருதத்தில் எழுதியதெல்லாம் சாஸ்திரம், என்பது நம்மவர்களிற் பலர் நினைப்பு. அஃதப்படியல்ல. உண்மையான சாஸ்திரங்களும் இருக்கின்றன. போலிச் சாஸ்திரங்களும் இருக்கின்றன. உதாரணமாக ஊர்த்துவ புண்ட்ரம் எவன் தரிக்கிறானோ அவனே வைகுண்டம் அடைகிறான். எவன் திருநீறு நெற்றியில் பூசுகிறானோ அவனே கைலாஸபதவியடைவான் என்று எழுதிவைத்த ஏடுகள் எத்தனையோ இருக்கும். அப்பியாசியானவன் இவைகளின் தன்மையைப் பகுத்தறியவேண்டும். இக்காலத்தில் நம்மவர்களுக்கு சாஸ்திரங்களின் யதார்த்த தாத்பர்யம் தெரியாமையாலேயே ஒவ்வொரு மதத்திலும் ஆசரணைகள் யாவும் வெளிவேஷமாத்ரமாக உள்ளன. பொது ஜனங்கள் தம் வாழ்வை முக்கரணங்களாலும் தூயதாக அநுஷ்டிப்பதைவிட்டு வெளியங்கங்களான மந்தர தந்தரங்களுக்கு விசேஷம் கற்பிக்கின்றனர். ஸத்தியத்திற்குக் குறைவும் அஸத்தியத்திற்கு ஏற்றமும் உண்டாகின்றன. உலகத்தில் மதங்கள் இருக்கும் இக்கால நிலையில், உண்மையான சாஸ்திரங்களை ஆராய்ந்து தெளிந்தவர்களே பக்தியின் உண்மையான இயற்கையை வெளிப்படுத்தி மதாசாரங்களைப் பயன்பெறச் சீர்திருத்தலாகும். மற்றவர்கள் போலிச் சாத்திரங்களையும் போலிக் குருக்களையும் பின்பற்றி, மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கினவர்கள் போலாவார்கள்.



14. 𑌲𑍋𑌕𑍋𑌽𑌪𑌿 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌭𑍋𑌜𑌨𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌶𑌰𑍀𑌰𑌧𑌾𑌰𑌣𑌾𑌵𑌧𑌿 ।

(நிச்சய உறுதி ஏற்படும்வரை) லோகத்தையும் அநுசரிக்க வேண்டும். ஆனால், போஜனம்முதலிய சரீரதாரண காரியங்களுக்கு மட்டுமேதான்.

குறிப்பு:—உலகத்தில் சாமானியர்களைப்போல் பக்தன் தானும் தன் சரீரயாத்திரையினிமித்தம் இருப்பது, உடுப்பது, நடப்பது, போஜனம், நித்திரை முதலிய வியாபாரங்களைச் செய்தபோதிலும் மற்ற பலவாறான அம்சங்களில் உலகத்தாரைவிட விசிஷ்டனாகவும் பற்றற்றவனாகவும், எதையும் உள்முகமாய்ப்பார்த்துச்சாஸ்திரங்களின் உட்கருத்திலேயே ஆழ்ந்தவனாகவும், இருந்துகொண்டு உலக க்ஷேமத்தினிமித்தம் தான் செய்யும் நற்காரியங்களிலும் தான் அநுபவிக்கும் பயனிலும் தாமரையிலை நீர் போல் விளங்குவான்.

15. 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿 𑌵𑌾𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌾𑌨𑌾𑌮𑌤𑌭𑍇𑌦𑌾𑌤𑍍 ।

நானா மதங்களின் பிரகாரம் பக்தியின் லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன.

16. 𑌪𑍂𑌜𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌨𑍁𑌰𑌾𑌗 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍍𑌯𑌃 ।

பூஜை முதலியவைகளிற் பிரியமா யிருத்தலே பக்தி என்று வியாஸர் கூறுகிறார்,

குறிப்பு:—பக்தி என்பது ஒன்றேயாயினும் அதைப் பலர் பல அதிகாரிகளை உத்தேசித்துப் பலவிதமாகக் கூறியிருக்கிறார்கள். பல மஹான்கள் பல காலங்களில் ஜனங்களின் பக்குவ நிலையை உத்தேசித்து, அததற்குத் தக்க விதமாய்க் கூறியிருப்பரென்று நினைக்க இடமுள்ளது. முதலில் ஜனங்கள் ஏறக்குறைய மிருகப்பிராயமா யிருந்த காலத்தில், ஸூக்ஷ்மசரீரங்கள் நன்கு விகாஸமடையவில்லை. ஸ்தூல சரீரத்தின் தூண்டுதலால் மட்டும் வெளிப் பிரவிர்த்திகள் அதிகமாக நிகழ்ந்தன. ஆகையால் அவர்களை மேன் மார்க்கத்திற்திருப்ப, மஹாபூஜை முதலிய ஆராதனை ரூபமான கிரியைகளை ஏற்படுத்தி, அவைகளை நேர்மையாய் நடத்த

வுதவுமாறு ஜனங்களைப் பிரவிர்த்திக்கச் செய்தும் ஒரு முகமாய் அவைகளில் சிந்தை வைக்கப் பழக்கியும் வந்தார்கள். அக்காலத்தில் அவர்கட்கு முதலில் கிரியா ரூபமான பூஜைகளை நியமித்து, அதனின்று அவர்களிடத்து உள்ள அன்பென்னும் குணத்தை மலரச்செய்து வந்தார்கள். பிரதிதினமும் பூஜைகளின் மூலமாய்த் தங்கள் அன்பைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பெருக்கிவரும்படி விதிக்கப் பெற்றூர்கள். ஸேவையின் மூலமாய்க் கொஞ்சங்கொஞ்சமாக அன்பை மலரச் செய்வதே ஒருகாலத்தில் பக்தி எனப் பெயர் பெற்றது. இவ்வழியை ஸ்தாபித்தவர் பராசர புத்ரரான வியாஸரேயாம். நம்மவருள் அனேகர் பூஜை செய்வது ஒன்றே பக்தியென்றெண்ணி அதோடு நிற்கிறூர்கள்.

17. கதாதிஷ்விதி கர்க:।

(ஆத்மவிசார விஷயமான) கதைகளைக் கேட்பதில் ஆவல் கோள்வதுதான் பக்தி என்று கர்கர் சோல்கிறூர்.

குறிப்பு:—முற் கூறியதற்கு அடுத்தபடியான பக்தியானது சிரவணம் என்று சொல்வது உசிதமாகும். பெரியோர்களிடமிருந்து நல்ல விஷயங்களை அடிக்கடி கேட்பதிலேயே பிரியங்கொள்ளுதல்தான் பக்தி என்று சொல்வோர் இச்சாரார். இம்மார்க்கம் தற்காலத்தில் வேறு ரூபமாயுள்ளது. அநேகர் செய்யும் உபந்யாஸங்களைக் கேட்க ஏராளமான ஜனங்கள் இக்காலத்தில் கூடுகிறூர்களல்லவா? ஸ்ரீ பெஸண்ட் அம்மையார் முதலிய பெரியோர் உபந்யாஸங்களைக் கேட்பதற்குச் சிற்சிலருக்கேதான் இயலுகிறது. நாம் அனுஷ்டிக்க வேண்டியதற்கு ஆதாரமாக அறிவை சம்பாதித்துக்கொள்ளும்பொருட்டு, பற்பலர் பலபல விதமாகக் கூறும் அபிப்ராய பேதங்கள் யாவற்றையும் துரபிமானமடையாமல் கேட்டு நிதானிக்கவேண்டும் என்ற கொள்கையோடு சிரவணம் செய்து வருவோர் சொற்பமேயாவர். பொதுவாக, இவ்வழியிற்செல்வோருக்கு முன் கூறியவிதமான பூஜை முதலிய வழிபாடுகள் இதைப்போல் அவ்வளவு பிரியகரமாயில்லை. இச்சார்பைச் சேர்ந்த பக்திமான்களும் பலர் கேட்டலோடு மட்டும் நிற்கிறூர்கள். அது போதாது. அடுத்தபடி சிந்தித்தல் ஒன்றும் உளது.



18. ஆத்மரத்யவிரோதேநேதி சாண்டில்ய:।

இடையறுமல் தன்னை(யறிந்தி)ன்பமுறலே பக்தி என்று சாண்டில்யர் கூறுகிறூர்.

குறிப்பு.—இது சிந்தனையிற் பிரியங்கொள்வோன் செய்யும் காரியம். நம்மில் அநேகருக்கு இத்தகைய ஸ்வபாவம் அதிகமாயுள்ளது. வெளிப்பார்வைக்கு முரண்பாடாய் உள்ள பற்பல விஷயங்களுக்கும் மூலாதாரமான சூசகம் ஒன்றைக் கண்டுபிடிப்பதிலேயே இவன் முயல்வான். வேற்றுமைகளுக்குள்ளும் ஒற்றுமையை உணர்வான். இம்மூன்றுபடிகளிலும் அநுஷ்டானமுறை வெவ்வேறுயிருப்பினும், அறிந்தவன் இம்மூன்றுபடிகளையும் ஒன்றிற்கொன்று சாதநம் என்று கண்டு நடுவுநிலைமாருமல் அநுஷ்டித்துவருவான். மற்றையோர்கள், தாம் இருக்கும் நிலைக்கும் அடுத்த மேல் நிலைக்கும் உள்ள சம்பந்தம் இன்னதென்றுணராது தன்னிருப்பிடத்தை விட்டு நகரச் சம்மதிக்கிறூர்களில்லை. உண்மையில் இது மிகவுயர்வான நிலையென்பதிற் சந்தேகமில்லை. இதை மநநம் என்றும் நம்மவர்கள் சொல்வார்கள். இவைகளை ஆராயுமிடத்து, ஒரு படியிற்காட்டிலும் மற்றொன்றில் மனிதனுடைய உள்ள நிகழ்ச்சி, விரிந்துகொண்டேவருகிறது. இதற்கும் மேலானபடியை அடுத்த சூத்திரத்தில் விளக்குகிறூர். அது இம்மூன்றும் சேர்ந்த ஓர் பெரும் பிரயத்நம்

19. நாரதஸ்து ததர்பிதாகிலாசாரதா
தத்விஸ்மரணே பரமவ்யாகுலதேதி॥

இவ்வித எல்லா ஆசாரங்களையும், எல்லாக் கர்மங்களையும், ஈசுவரார்ப்பணம்செய்தும், (ஒரு காரியத்திலாவது) அவரை மறப்பின் பெருந்துக்கத்தையடைதலுமே பக்தி என்று நாரத பகவான் கூறுகிறூர்.

குறிப்பு:—எல்லா ஆசாரங்களையும் ஈசுவரார்ப்பணம் செய்வதென்றூல் என்ன என்று நமக்கு சந்தேகமுண்டாகலாம். அதாவது, ஈசுவரன் நம்முன்பாகவே எப்போதும் உளர் என்பதை உணர்ந்து, அதன் பயனாய், எச்சிறு காரியத்தையும் அவருடைய ஊழியனாக இருந்து, அழகாயும், செவ்

மையாயும் செய்யவேண்டும். இப்படிச்செய்யும்போது, ஆரம்பத்தில் அடிக்கடி நாம் தவறுவோம். அடிக்கடி "நாம் செய்கிறோம்" என்றதற்புகழ்ச்சியான எண்ணமே திரும்பத் திரும்பநமக்கு உதிக்கும். இல்லாவிடில் நமது எண்ணம் மட்டும் ஈசுவரன் முன்பாகவே இருப்பதுபோல் பாசாங்கு செய்யும். நாம் செய்துமுடிக்கும் காரியங்களைப் பார்ப்போமாகில், அவை அழகும், சிரத்தையும் குன்றியனவாயிருக்கும். இவ்விதம் இருத்தல் உதவாது. உதாரணமாக, நம் யஜமானன் கோபிப்பானே என்று பயந்து, எவ்வளவு நேர்மையாய் நம்காரியங்களை முடிக்கிறோமோ, அவ்வளவு நேர்மையாய்க்கூட நாம் எக்காலத்தும் செய்யாவிடில், எக்கருமத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்வோர்களாக நாம் நம்மைச் சொல்லிக்கொள்வதெல்லாம் வீண் பாசாங்கேயாம். முன் சூத்திரத்தில் கூறப்பட்ட பக்தியின் முதிர்ச்சியால், நாம் ஆசரிக்கும் எல்லாக்கருமங்களும் பகவான் முன்பாகச் ஒப்பிக்க வேண்டியவை என்று உணர்ந்து சீராகவும் செவ்வையாகவும் முடித்துப் பிறகு அவ்வளவு பெருமையுடைத்தாய்ச் செய்த பக்தியும் வேலைத்திறமும் தன்னுடையது என்று ஒருசிறிதும் எண்ணாமல், எல்லாம் பகவானுடைய சக்தி, எல்லாம் அவருக்குச்சொந்தம், தான் அவருடையவேலை இவ்வுலகில் நடைபெறுவதற்கேற்ற ஓர் கருவியே, என்று உள்ளுணர்வு கொள்வானாயின், உண்மையாகவே இவன் மூலமாய் உலகிற்கு ஈசுவரனுடைய அருள் பெருகுகிறது. ஈசுவராநுக்கிரஹத்திற்கு இவன் ஓர் வாய்க்காலாகிறான். இப்படிப்பழகுவதில் சுயநயம் என்பது ஒழிகிறது. ஓர் தோட்டவேலைக்காரன் எவ்வளவோ உழைத்தபோதிலும், பயன்யாவும் யஜமானனைச் சேர்ந்தது என்றுஎப்படி நிச்சயபுத்திகொண்டிருக்கிறானோ, அதேமாதிரி நாம் ஈசுவரனிடத்துக்கொள்ளவேண்டும். ஈசுவரன் ஸர்வபூத அந்தர்யாமியாகையால், ஸர்வபூத ஹிதத்தைக்கருதியே நடப்பதுதான் ஈசுவரார்ப்பணமாகும். நமது உள், வெளி, என்றிருவகைப்படும். நமது வெளி ஆசாரங்களால் தான் பிறருக்கு நன்மைசெய்யக்கூடுமென்று கருதி, அநேகர் சுத்த ஆடைகளை உடுப்பதும், ஸ்நாநபானங்களைச் சரிவர நடத்துவதுமாயிருக்கிறார்கள். இன்னும் அநேக பூஜைகளைச்செய்கிறார்கள். பல நற்காரியங்களைப பிறருக்குபகாரமாய்ச்செய்கிறார்கள். ஆயினும், நமது உள் ஆசாரமும் அதிமுக்யம். எப்படியெனில், இருவர் இரண்டு பாடசாலைகளை ஏற்படுத்துகிறார்கள். அது நற்காரியந்தான். ஒருவர் தமக்குப் பட்டப் பெயர் கிடைக்கவேண்டுமென்ற கருத்தோடு அவ்விதம் செய்கிறார். இன்னொருவர் தேசத்திலுள்ள ஏழைப் பிள்ளைகள் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற கருத்தோடு அவ்விதம் செய்கிறார். இருவரும் ஒரே காரியத்தைச் செய்தாலும், அவரவர் கருத்துக்களைக்கொண்டு எது சிலாக்கியம் என்று நாம் யூகித்துக்கொள்ளலாம். காரியமும் கருத்தும் நன்றாயிருந்தாலும், தீர்க்க யோசனையும் விவேகமும் அதியவசியம். நல்ல கருத்தோடு ஏற்படுத்திய பள்ளிக்கூடமானது தீர்க்க யோசனையும் விவேகமுமில்லாமையால் நேர்மையாய் நடைபெறாது. நம் திரிகரணங்களாலும் உண்மையாய் உழைத்து அவ்வுழைப்பு அனைத்தையும் ஈசுவரனுக்கு என்று அர்ப்பித்து தான் என்னும் அஹம்பாவத்தை லவலேசமுமில்லாமல் ஒழிக்கவேண்டும். இத்தனை அம்சங்களில் ஏதாவதொன்றை ஒரு சிறு காரியத்திலாவது அலக்ஷியம் செய்வோமாயின் மிகுந்த பச்சாத்தாபமடைகிறவன்தான் பக்தன்.



20. அஸ்த்யேவமேவம் ।

அது இவ்விதமேதான், இவ்விதமேதான்.

குறிப்பு:—ஸ்திரீ புருஷர்களாகிய நாம் வெவ்வேறு சுபாவமுடையவர்கள். ஆகையால், வியாஸர் சொன்ன பூஜாப் பிரேமையும், கர்கர் சொன்ன கதா சிரவணமும், சாண்டில்யர் சொன்ன ஆத்மானந்தானுபவமும் முறையே நம் சரீர நியமத்திற்கும், மனோநிக்ரஹத்திற்கும், காமசுகத்தைப் பரிசுத்தி செய்வதற்கும் நாம் அலக்ஷியம் செய்யவொண்ணாத சாதனங்களேயாம். எந்த ஒரு அப்பியாசியானவன் இத்தனை விதமான சாதனங்களையும் விவேகத்தோடு யதார்த்த முறைமையில் ஏற்றுக்கொள்வானோ, அவன் சரியான பக்தன். ஸ்ரீ நாரதர் சொன்னதில் மேற்கூறிய எல்லோருடைய வழிகளும் தொகுத்துரைக்கப்பெற்றன.

21. யதா வ்ரஜகோபிகாநாம்।

கோபிகைகளுடைய பக்தி எப்படியோ (அப்படித்தான் ஈசுவரார்ப்பணம் செய்யவேண்டியது).

குறிப்பு:—சமீப காலத்தில் ஒரு அவதாரம் ஸம்பவிக்கும் என்றும் நம்மவருள் பலர் உலகில் அவர் இப்போதே தோன்றியிருக்கின்றனர் என்றும் நம்புகிறார்கள். ஆயினும் கோபிகாஸ்திரீகளைப்போல, நமது ஸ்திரீகளில் அநேகர் அவதார புருஷனிடத்தில் பிரேமையால் ஈடுபடுவார்களானல், நாம் அவர்களைப்பற்றி என்ன நினைப்போம்? பலர் தம்மை எப்படி நினைப்பினும், நியாயம் என்று தாம் கண்டவழியில் நிர்ப்பயமாய்ச் செல்லவேண்டும் என்று நமது ஸ்திரீகள் நினைக்கவேண்டுமானல், அவர்களுடைய ஸ்வாதந்தரியமும், விவேகமும், பிரேமையும் எவ்வளவு கம்பீரமாயிருக்கவேண்டும்? அவ்வளவு தூரம் நமது தேசத்தைத் தயார்செய்ய நாம் எத்தகைய பாடுகள் படவேண்டும்? இவைகளைச் சிறிது யோசிப்போம். செய்யவேண்டிய பிரயத்தனங்கள் அநேகங்களுள் முதலாவது, ஜனங்களின் அஹம்பாவத்தை ஒழித்தல். அது பல ரூபங்களிலும் உள்ளது. மஹாத்மாக்களோ லோகாதீதமான சுத்தப் பிரகாசத்தோடு வருவார்கள். நமது அஹம்பாவம் ஒன்றே அவர்களை வரவேற்கத்தடையாயிருக்கிறது. அவதார புருஷரோ தன்னலமற்றவராயிருப்பார். தியாகிகள் எப்படியிருப்பார்கள்? நாம் எப்படி அவர்களுக்குதவியாயிருக்கலாம்? என்று நம்மனங்களில் உதிப்பது நியாயம். நாம் தியாகத்தால் தான் உதவிசெய்யலாம். தியாகம் என்னும் சொல்லினலேயே, அது எவ்வளவோ வருத்தப்பட்டுச் செய்யவேண்டிய காரியம் என்று தொனிக்கிறது. தியாகம் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே அநேகர் கீழே படுப்பர். சிறிதுபேர்கள் தான் நிமிர்ந்து நிற்பர். அச்சிறிது பேர்கள் என்னென்ன தியாகம் செய்யவேண்டும் என்று கேட்கலாம். முதலில் நம்முடைய எண்ணங்களை தியாகம் செய்யவேண்டும். "என் அபிப்பிராயம் தான் ஸத்தியம்" என்று ஒரே முரண்டாகச் சாதிக்கின்றனர் அநேகர் உளர். மற்றவர்கள் பேசுவதிலும் உண்மை இருக்கலாம் என்று நாம் கருதவேண்டும். நம்தேசம்

ஆறஞ்சு ஒஸத்தி சலவை மல்லிலும் பச்சை மட்டும் 20 × 20, 18 × 18 காரிக்கன் மல்லிலும் தயாராகிறது. எங்கள் சேலைகளில் எங்கள் லீலும் போடப்பட்டிருக்கும். மேற்படி சேலைகளுக்கு முந்தி அருகு ஒன்றுமில்லாமல் ஒரே பிளெயின்தான். ஆகையால் முந்தி அருகு தேவையுள்ளவர்களுக்கு முந்தி (டைமன் கலர் பட்டினால்) பூபோட்டும் அருகு கொடிபோட்டும் அனுப்பி அதற்கு சேலை 1-க்கு ரூ. 1-8-0 ஸ்பெஷலாய் சார்ஜ் செய்யப்படும்.

44 இஞ்சு 9 கெஜம் சேலை 1-க்கு ரூபா 6-4-0.

50 இஞ்சு 9½ கெஜம் சேலை 1-க்கு ரூ. 7-12-0.

44 இஞ்சு கெஜம் ரவிக்கை 1-க்கு ரூபா 0-5-6.

50 இஞ்சு ½ கெஜம் ரவிக்கை 1-க்கு ரூபா 0-6-6.

மற்ற ரகங்களும் எவர் எவர்களுக்கு எவ்வளவுகெஜத்தில் தேவையோ அவைகளை எழுதினால் விலை விபரமும் சாம்பிளும் அனுப்பப்படும். கலர் இமிடேஷன் பட்டு சேலைகளும் 7 ரூபாய் முதல் 20 ரூபாய் வரையில் கிடைக்கும்.

| V. P. சார்ஜ் பிரத்தியேகம். | | பாக்கிங். | போஸ்ட். | ஆக. |
|---|---|---|---|---|
| 1 | சேலைக்கு உத்தேசம் | 0-2-0. | 0-8-0 | 0-10-0. |
| 2 | ,, ,, | 0-4-0. | 0-11-0. | 0-15-0. |
| 3 | ,, ,, | 0-5-0. | 0-14-0. | 1-3-0. |
| 4 | ,, ,, | 0-7-0. | 1-1-0. | 1-8-0. |

இதற்கு மேற்பட்டால் ரயில்வே பார்சல்தான் செலவு குறைவாய முடியும். வியாபாரிகளுக்கும் கமிஷன்ஏஜண்டுகளுக்கும் ஒரே தடவையில் 5 சேலைக்கு மேற்பட்டு ஆர்டர் செய்கிறவர்களுக்கும் விலையில் சல்லீஸ் செய்து அனுப்பப்படும்.

(2) பனியன்களுக்கு ஆர்டர் செய்தால் குவாலிட்டி நம்பரும் இஞ்சு விபரமும் சரியான அட்ரஸ் போஸ்ட் or ரயில்வேபார்சல் விபரமும் யெழுதி 4-ல் 1 பங்கு அட்வான்ஸ் அனுப்பவேண்டியது. மற்றவைகள் லெட்டர்மூலமாய் யெழுதி தெரிந்துகொள்ளலாம். ரப்பர் ஸ்டாம்ப, இங்கு வகையராக்கள் லெட்டர் மூலமாய் விலைகள் தெரிந்துகொள்ளலாம்,

1½ கெஜம் நீளமுள்ள இமிடேஷன் சில்க் மப்ளர் டெஜன் 1க்கு ரூபா 15-0-0. சலவை பனியன்களுக்கு டஜன் 1-க்கு சலவை கூலி 0-4-0 சேர்த்து வசூல் செய்யப்படும்.

மேல்கண்ட சாமான்கள் திருவல்லிக்கேணி அக்கர் வியாபாரம் K. V. சாஸ்திரிகளிடமும் கிடைக்கும்.

**O. V. Gopalaswamy Iyer,**

*Cloth Merchant & Commission Agent,*

***299, Thambu Chetty Street,***

G. T. MADRAS.

ஒ. வெ. கோபாலஸ்வாமி அய்யர்,

ஜவுளி வியாபாரம் & கமிஷன் ஏஜண்டு,

299, தம்பு செட்டி தெரு,

ஜி. டி. சென்னை.

## ஸ்ரீமத் பகவத்கீதை.

கிரந்தசுலோகமும் தமிழ் மொழிபெயர்ப்பும். எம்மதச்சார் புமின்றி ஸர்வமத சம்மதமாயும் மூலகிரந்தத்தை அனுசரித்த தாயுமுள்ளது. பிர்ம்மவித்தியா மஹாஸபையின் தலைவரான டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பை அனுசரித்து, எனங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. காலிகோ பைண்டுசெய்த பாக்கெட் ஸைஸ் விலை அணா 9. இன்னும் பிரம்மஞானத் தமிழ்புஸ்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்திவிலாச புஸ்தகசாலை,
எடமணல், (சீர்காழி வழி).

# கலர் சேலைகள், பனியன்கள் ரப்பர் ஸ்டாம்பு & இங்குகள்.

இப்பவும் எங்களிடம் அடியில்கண்டபடி கலர் சேலைகள், ரவிக்கைகள், தாவணிகள், சித்து அல்லது சித்தாடைகளும், சேலம் பனியன்கள் 1 முதல் 9 ருவாலிட்டி வரையிலும் 18 முதல் 40 இஞ்சு வரையிலும் நல்ல தினுசுகளாகவும் விலை நயமாகவும் (ரப்பர் ஸ்டாம்பு), ரப்பர் ஸ்டாம்பு இங்குகள் ஸ்பீரியராகவும் புளூபிளாக், ரெட்டிங்க், பச்சை, பிரஸ் இங்குகளும், வெகு நாணயமாகவும் ஸுபீரியராகவும் தயார் செய்து வருகிறோம். கமிஷன் யேஜண்டுகள் தேவை. லெட்டர் எழுதினால் சாம்பிளும் விலை விபர லிஸ்டும் அனுப்புகிறோம்.

(1 கலர் சேலைகள் சாயம் காரண்டி. சாயம் போனால் மறுபடி இனமாய் சாயம் போட்டுக் கொடுப்பதுடன் அனுப்பும் சிலவுக்கும் ஸ்டாம்பும் வைத்து அனுப்பிவிடுகிறோம். சாயம்போன உருப்படிகளை மருசாயம் போடவேணுமானால் வாங்கின தேதி முதல் ஒரு மாதத்திற்குள் அனுப்பிவிடவேண்டியது. டயம் கடந்து அனுப்பினாலும் எங்கள் சீல் இல்லாததை அனுப்பினாலும் நாங்கள் ஜவாப்தாரியல்ல. ஒரு சேலைக்கு ஆர்டர் செய்தால் பூரா பணமும் ரிஜிஸ்டர் பாக்கிங் செலவு அணா 0-10-0 சேர்த்து அனுப்பிவிட்டால் உங்களுக்கு M. O. கமிஷன் 0-2-0 லாபப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட சேலைகளுக்கு ஆர்டர் செய்தால் அட்வான்ஸ் 4-ல் 1 பங்கு அனுப்பிவிட வேண்டியது. ஆர்டரில் கலர் நீளம். (அகலம் இவ்வளவு இஞ்சு) ரயில்வே பார்ஸல் அல்லது போஸ்ட் பார்சல் விபரமும் அட்ரஸ் விபரமாயும் யெழுதி அனுப்பவேண்டியது. இதர ஜவுளிகளும் நாணயமாயும் விலை நயமாயும் கிடைக்கும்.

சாக்குலெட் or பொடி, பிரவுன் or கெம்பு, புளூ or நீலம். காங்கு or கருப்பு, வயலெட் or ஊதா. ரோஸ். சிமிட்டு. காக்கி.